மிளிர்விழிக்குருவந்தோற்றும்விரிசெவிபுகுதுங்கேள்வி
யளிமலர்முகப்பாசியறுசுவைபுகுதனுவு
தெளிவுடன்மேலேவந்துதீண்டுதறன்னைப்பற்றுங்
களிமனமேலேபற்றுங்கண்குடிக்குமைச்சர்வேந்தர்
ஆக விருத்தம் (33)

நடை.

யென்றுமன்னன்சொல்லியமைச்சனே துரைப்பான்
னன்றிகெற்மன்னவனே நானுரைப்பேன் பாருமென்று
மற்குருவின்றன்னிடத்தில்வந்தமதிமந்திரியு
மற்குருவின்காயமதைவாகாகக்கண்டமைச்சன்
வீரகிறைமற்குருவைவெட்டித்தப்பேயவீரம்போ
தீரகிறைவீரர்சின்னக்கடர்ந்துவெட்டுகிது
உருக்குத்தான்வெட்டுமுரத்திவன்செங்கையின்வாள்
கொருக்கியிருந்தாண்டாய்கொருக்கவெட்டவானேது
மன்னவன்காத்திருக்கும்மதி: வான்வெட்டிதவாக்
கென்னைகேள்கிராண்சோதினைபார்க்க

வந்தவிடத்திவ்வகைதெரியாதேவெயிர்த்துச்
சிந்திமடிந்தவிட்டான்றென்னவன்னையாற்குருவு
மின்றரசன்கள்ளனிதுகெமாமென்னவெண்ணி
மன்றல்கமழ்மன்னவன்முன்மந்திரியும்வந்துநின்று
தென்றுகுருவைச்செயித்தகள்வனிச்சபையில்
இன்னவருமிருக்கிறார்பார்வேந்தே
சொல்லிமடிபிடிக்கத்தக்காயமெனவுந்
கல்வினாக்குதோளாகுனொகாவலனேயென்றுரைத்தான்
அந்தவுரையிலரசன்மனம்வெருண்டே
யிந்தச்சபையிலிருந்தகள்வனென்றனிலும்
வலியனேதிப்புமடிபிடித்துத்தானிழுத்தாற்
சலுனவெவனேனினுத்தாரணியில்வெட்டுவேனென்
காட்டாதிருந்தாற்கேடுதிக்கொன்றிடுவேன்
மீட்டாதமைச்சாவினைப்புபயமில்லையல்
யென்றுமன்னன்சொல்லியமைச்சனோர்மனதாய்
மன்றிற்பயமுனாதேதா மன்னவனே சொல்லுகிறேன்
தேவரீர்கள்ளனிடமோகாணுமும்மைமக்
காவிரிசூழ்நாடாகருதிமடிநான்பிடிப்பே



னென்றமைச்சன்கூறவினியபுகழரச
னன்றென்றேயுள்ளேநகைத்துமுகஞ்சினந்தே
யெந்தவகையமைச்சரென்னைநீய்கள்ளனென்றாய்
அந்தவகையிலடையாளங்காட்டுமென்றான்
என்றேயரசனியம்பமதிமந்திரியும்
மன்றுலகில்வச்சிரவாள்மன்னவனுக்கல்லது
மற்றொருவர்செங்கைதனில்வச்சிரவாளில்லையின்னாள்ச்
சுற்றுபுகழ்வேந்தாதுங்காபலவாளில்
வச்சிரவாள்வெட்டுவருடாதுசேர்ந்ததிற்கு
முச்சிதமாய்மற்றொருவர்க்குற்றமிலதில்லாதே
ய்வ்வகையாற்கண்டேனாசேயெனவுரைத்தா
ளிவ்வகையால்வேந்தனியல்பாய்மனமகிழ்ந்து
தக்குபுயமார்பதனிற்றுணைத்துமந்திரியைத்
துங்கன்மகிழ்ந்துதுலங்கக்கத்தேயிருத்தி
மண்ணில்மதிமந்திரிமார்வான்வேந்தர்கண்ணாகு
மெண்ணியறிவில்லாவிகல்கொடுமைமந்திரியை
மண்ணுலகில்வைத்திருந்தமன்னவனாறிவிழந்து
கண்ணிலார்போலக்கலங்குகின்றவேந்தரவர்

விருத்தம்.

பதியிலரசர்மந்திரிமார்பலநூல்கேள்வியறிவுநல
மதியினுரைசெய்யாசருபர்மனதுசெவியாய்மகிழ்வுபெறும்
துதியில்காத்துநெல்லியெனத்துலங்குஞ்செவியேவிழியாமே
விதியிலமைச்சரறியாமல்வேந்தர்க்குரைத்தல்விண்பழியே
ஆக விருத்தம் (34)

நடை.

மந்திரியைச்செங்கையினல்வாசகவேதமுனி
முந்தநடந்ததுவுமுறைமையற்றவாசிரியன்
வந்துமடிந்ததுவுமன்னன்வகைவகையாய்ச்
சிந்தையுடனெல்லாஞ்சிறப்பாய்மனமகிழ்ந்து

வீரமணிவேந்தன்விரும்பியந்தவட்டிலையு
மாரமணிமார்பனத்தாச்சியேகாட்டிப்

பொன்னின்றுகில்நீக்கிப்போர்வேந்தன்றன்னுடைவின்
மின்னுமவன்வாள்க்காயம்விளங்கவினைவருக்குங்

காட்டினன்யாவர்களுங்கண்டுமனதேங்கித்
நீட்டுபுகழ்மன்னவனைநீர்க்குத்தீரனவன்

மீறுஞ்சிலம்புமிகுசுருதிவாள்வீச்சச்
சீறுமிருசிங்கஞ்சிறந்தபதினாயிரம்பேர்

வந்தேயெதிர்த்தாலும்வகுளைவாங்கவல்லான்
இந்தநகரிலெதிர்த்தோரொருவருமாய்க்

கைச்சுருதியாகக்கடுகிவெட்டாதேபோறுத்து
மெய்ச்சுருதிமேலில்வெகுகாயமேத்துநின்றீர்

மன்னவரேயென்றுமயங்கிமிகவழுதார்
அன்னவரையெல்லாமமந்திமனுவரசன்

செங்கைதரித்தேதான்கிருபையுளத்திருக்குந்
தங்குங்கொடுமைவினைசாராதேயெங்களிடம்

முந்தயெங்கள்வங்கிசத்தின்முற்கதைநாஞ்சொல்லுகிறோம்
மந்திரியேயக்கதையைவாகாகக்கேளுமென்று

சொன்னதொருகதைதான்சொல்லக்கேள்பார்பதியே
முன்னாட்கலிகாலமோதுநெறிச்சோழமன்னன்

ஆருருநாட்டில்ரசாளும்போர்வேந்தன்
சீருரும்வேந்தன்சிறந்தநகர்சோதினையாய்க்

தங்குவச்சிரவீரருவித்தாரணியையாளுமன்னன்
காவறலையாரிகனசேனைகாணுமற்

பூவுலகில்வேதப்புனிதநெறியாராய்ந்த
வேதியர்கள்கொல்லையிலேவேந்தன்வருகையிலே

நீதிகொல்லைவால்வீச்சநீண்டநெட்டுமண்மேலே
நீண்டவரவநெடுகப்படுத்திருக்கத்



தாண்டுபுகழ்மன்னவனுந்தாவியந்தமண்மீதிற்

செங்கைவைத்தேயேறுகையிற்செங்கையின்கீழப்பாம்பு
தங்கியகப்பட்டுமன்னன்றன்கைசுத்தியேகடிக்கப்

பாம்புகடிக்கமன்னன்பாம்புதனைச்செங்கையினாற்
றும்புபோலேபிடித்துத்தார்வேந்தன்றான்மயங்கி

அரவுதனைவிட்டேயரண்மனைக்கேசெல்லாதே
யரவுகடித்திறக்கவாவுதரித்தோன்சிதித்தான்

இந்தமறையோரியல்புநெறிக்கொல்லையிலே
வந்தவகையும்வளமைவிதிமூண்டதுவும்

விந்தையுடனியாவர்களும்வேந்தனிந்தக்கொல்லையிலே
வந்துமடிந்தவகையேதெனவுரைப்பார்

என்றனெழிற்கையதனிலிப்பாம்புதானிருந்தால்
வந்தவர்களிக்குமன்னன்மாண்டதாவாலுமென்பார்

மண்ணிற்புரந்தரன்போல்வாழ்ந்தபுகழ்வேந்தன்
மண்ணாருகிற்சாய்ந்துமயங்கித்தியங்கிநின்றான்

றென்னன்விடத்திற்றியங்கிநிற்குமவ்வளவின்
மன்னவதியதுவந்ததுவுந்தானறியான்

அந்தமனையாளருமறையின்வேதியனு
மிந்தநகரியியல்புமுட்டிவாங்கியுண்போ

னேந்துகுழந்தையிவன்பாலன்மங்கையருஞ்
சாந்தமுடன்மனையிற்சதுராய்ப்படுத்திருந்து

சலபாதைசெய்யவவர்தானெழுந்துவீடுவிட்டு
நலமானவேதியனுநாடிவெளியில்வந்து

நடந்தவல்லினுழிகையைநான்பார்க்கவேணுமென்று
அடர்ந்தவிண்ணின்றாரகையையந்தணனுந்தான்பார்த்தான்

ஆகாசந்தன்னிலருக்கன்றனக்கெதிரே
ஆகாசராகுமடர்ந்தவந்துநீண்டுவெதைக்

---

சங்குசேருளிற்கபேயொருவனுமாய்
இதை 48-ம் பக்கத்தில் 23-வது வரியாய்ப் படிக்க.

கண்டுமறையோன்கவலைபெரிதாய்மயங்கி
வண்டுலவுசெங்கொடையான்மன்னன்றனக்கவதி

வந்ததேயென்றுமயங்கியழுதுநின்றான்
அந்தணனைத்தானேக்கியந்தணரேநீர்தாமும்

வெம்பிக்கலங்கும்பிசாரதுக்கஞ்சொல்லுமென்றே
யம்பின்விழியாள்கேட்கவந்தணனுமேதுரைப்பான்

மங்கையேயின்னகரின்மன்னனிராசியிலே
பொங்கியரவம்பொழிந்துவிடமூட்டியதால்

வேந்தனரண்மனையில்வேந்தனதுசித்திரையிற்
வேந்தையரவமிகவேகடித்திருக்கும்

படுக்கையிடத்தின்மன்னன்பாம்பான்மடிந்திடுவான்
றடுக்கவொருவரில்லைதயலரேவேந்தனுக்குச்

சாதகநூல்பார்க்குந்தருமநெறிமறையோர்
நீதச்செல்காலமிகழ்காலமாராய்ந்து

சாந்தியெக்கியவோமந்தர்மபரிகாரசுத்தி
தேர்ந்தவர்கடுவினையைத்தீர்த்திலையேவந்ததக்கை

வந்துதுடரும்வசைமாமறையோர்காணுரோ
இந்தவிதிக்கென்னசெய்வோமிந்தநகர்வேந்தன்

நீதியுத்தியுள்ளநெறியின்மனுவேந்தனென்பார்
பாதிபித்தவல்விருளிற்பார்வேந்தன்றன்மனையிற்

சென்றுசொல்வோமென்றுற்சிறந்தமன்னன்கோட்டைசுற்றி
மன்றினும்போகுமுன்னேமாண்டிடுவான்போர்வேந்தன்

விருத்தம்

திரியதுவேகுமுன்னந்தீபம்நெய்வார்க்கினிற்குஞ்
சரியதுவெந்துநீறிறனர்சுடர்நெய்விட்டாலும்
அரியதுமேவிடாதேயடர்சுடர்த்திரிவேருகிற்
பெரிதுடலாசனுவிதிரிந்துடன்செனனம்போமே.

ஆக விருத்தம் 85



நடை

அய்யோவிதியென்றழுதான்மறையோனுஞ்
செய்யமறையோனேசீர்சிறந்தவேந்தனுக்குத்

துய்யமறைநூலிற்சொல்லியவாறாய்ந்து
பையரவினல்வினையைப்பாங்காய்த்தவிருமென்றாள்

மாதுமினைவகூறமறையோனுமேதுரைப்பா
னீதிசமுத்தசுப்பிநெய்நமக்கேயுண்டானுல்

மன்னவன்றன்பேருரைத்துமன்னனிராசியிலே
கன்னிகையோராசிகலந்தவிடந்தீர்த்திடுவே

னேமநெய்யுமில்லையுயர்சமுத்தசுப்பியில்லை
சாமமதிலேதரித்திரவானென்னசெய்வே

னென்றுமறையோனியம்பவந்தமங்கைசொல்வாள்
இன்றுமறையோனேயியல்வேந்தைக்காத்தருளும்

வேதியரேபாலகற்குவேணுமென்றேயிச்சைநெல்லிற்
காதலித்தமோர்சிறங்கைகாணுநெல்லிலேகூட்டி

ஏரிலொருகாற்பணமாய்நெய்யுழக்குவாங்கிவைத்தேன்
பாரின்மிதந்தற்கில்லையென்றுற்பாவம்வந்துசேராது

தங்குநின்றவோமந்தனக்குநீர்கொண்டுவந்து
பொங்குஞ்சமுத்தசுப்பிபோதுமிச்சம்வைத்திருந்தேன்

எடுத்துவந்துநான்றருவேனியல்வேந்தைக்காருமென்றே
அடுத்தசமுத்தசுப்பியாவினெய்யுமாதிந்தாள்

அந்தநிமிசமருண்மறையோனேம்புகையிற்
சிந்தையுடனெழுப்பித்தென்னன்விதிராசியிலே

மூட்டுமரவின்முடுகுதியானவிஞ்சை
காட்டிமறையோனளினவாவுடலைப்

பதினறுதண்டாகப்பார்த்தான்றியானமதாற்
பதினறுதண்டமதுரய்ப்பட்டுதேபாழ்புடலும்

மன்னனவதிவிட்டுவாகாசநீங்கியபின்
மன்னன்பிழைத்தானெனவேமங்கையரும்வேதியனும்
தங்கும்வறுமையினிற்றாளிடைந்துதுன்பமுற்றார்
தங்கமுடிபொக்கிசங்கடான்கண்டசிந்தையொப்பாய்ப்
பொங்கிமகிழ்ச்சிபுளகவுடம்பாய்மகிழ்ந்தார்
தங்கியிருந்தார்மனையிற்றார்வேந்தனந்நேரம்
பாரவிடந்தீர்ந்துபதருமனையின்பமதாய்த்
தீரமிகுந்துநியக்கந்தெளிந்துசெங்கை
சுத்துகின்றபாம்புதனிந்துபதினாறுதுண்டம்
வெத்திமன்னன்றானெடுத்துவீறாய்ப்புதைத்துவைத்து
அந்தணனுமங்கையருமன்புகந்துகாத்ததெல்லாஞ்
சிந்தையுடன்கண்டுசிறந்திவர்கடன்வயிற்றி
லின்றுபிறந்தோமெனவேயேகியரண்மனையின்
மன்றல்கமழும்மன்னவனும்வந்துமகிழ்ந்திருந்தான்

விருத்தம்

இறந்தவர்பிறந்ததொப்பாயிரவிமேற்றிசையின்மாறிச்
சிறந்தநுநிழக்குற்றாற்போற்சென்னமுன்செயலைமாறிப்
பிறந்ததுமறந்திட்டாலும்பெருகுமிச்சென்னவாசை
மறந்தமைமறவாகன்றிமன்னவன்மகிழ்ச்சிகூர்ந்தான்.

ஆக விருத்தம் 36.

நடை.

மன்னன்மறுநாண்மகுடவர்த்தனர்சூழத்
தென்னன்கொலுவிற்சிறந்தவமைச்சர்களைப்
பார்த்துநெறிவேந்தன்பாங்காகநம்முயிர்
சாத்துநெறியாரணனூற்சாதகத்தின்வேதியனைக்
கூட்டிவாவென்றுரைத்தான்கோமானுரைகேட்டுத்
தீட்டுமறையின்சிறந்தமறையவனைச்
சென்றழைத்துவந்தார்திறன்மறையோரையிரம்பேர்
மன்றல்கமழும் [illegible] னைமேலொரும்



வேதியனைவேந்தன்மிகவணங்கியேயிருத்தி
நீதிமறையோனைநிலவேந்தன்பார்த்துரைப்பான்
ஆரணரேயென்றனக்கேயானசெயகாலங்
காரணரேயின்னுளிற்கண்டுரைக்கவேணுமென்று
மன்னவனுங்கேட்கமறையோருநூலுணர்ந்து
தென்னவனுக்குச்செயகாலநல்லதென்று
சொன்னார்வேலைதுலங்கயிந்தவேதியனு
மின்னுணம்வாக்கெவர்க்குமேறுமெனவிருந்தான்
வேதியன்பேசாதிருக்கவேந்தனும்பின்னேதுரைப்பான்
நீதிமறையோரேநிறைகாலநல்லதென்றீர்
இக்காலத்தன்னிலியம்பிலெனைக்கொல்லுதற்கு
மிக்கானதில்லைவிமலனருட்சந்நிதியில்
எட்டாங்கெருவிலேசந்தவடிசிறகின்
மட்டார்கிழக்குமனையிலொருமறையோன்
ஏழையவருமியல்புமனையாளொருத்தி
வாழுமவர்க்குமதலையொன்றேயங்கவர்க்கே
அந்தணனுமென்னையடர்ந்துபில்லியால்வதைக்கச்
சிந்தையுடனுயிரைமுக்கிச்செப்பினனங்கவளுங்
கொல்லுமென்றுசொல்லிக்கொடுத்தாள்சமுதைசுப்பி
வல்லவெக்கியம்பண்ணிமகாபேயையேவிட்ட
வல்லவனையிங்கேவரவழைக்கவேணுமென்று
செல்வியரசன்றுதித்தசபைக்குரைப்பான்
தந்திரத்தின்பேய்கள்சடையும்வெளுத்தபல்லு
மந்திரத்தின்றன்னெடுத்துவந்ததென்றன்வாசலிலே
யன்னேரமெங்களுக்கேயானகுலதேவதைகள்
மின்னோரையிலான்மிகுத்ததங்கையெழுகத்தோன்
நடனமிடுமீசனடனமிடும்பேயையென்று
திடமுடனேகாக்கச்சினந்தேயொருபாம்பு
வந்துதுடந்தேகடிக்கமாதுமையாடன்பாலன்
கந்தன்மயில்வந்தேதடுகியரவைப்பிளந்து

சொன்றுவிடத்தீர்க்கக்கொடியகனுவித்தனையு
மின்றுகண்டேனாத்திரியிலென்கனுப்பொய்யாது
அப்படியாம்வஞ்சமடர்ந்தயில்லிவேதியனை
யிப்படியில்வைத்திருந்தாளியாவருக்குமாகாது
அந்தமறையோனையருண்மறையோரேநீங்கள்
இந்தச்சபையிலியல்புடனேதான்காட்டி
வேதியருக்காக்கினையும்வீறுயுரையுமென்று,
நீதிமன்னன்கேட்கவிறைந்திருந்தவேதியர்கள்
சோதித்துப்பார்த்துத்தலக்குமறையவனைச்
சாதித்துமன்னனவன்றான்விடுத்தவாக்கினையுங்
கண்ணைப்பிடுங்கவென்றகாவலவரோடுரைத்தார்
மன்னனின்மனுவேந்தன்மறையோனைக்கண்டவுடன்
சிங்காதனத்திருக்கத்தென்னன்பயந்தேயெழுந்து
மங்காதவேதியனைவாஞ்சையாய்த்தெண்டனிட்டு
அந்தணரேயிப்போதடுமைசொன்னசெய்தியெல்லாஞ்
சிந்தையுடன்கேட்டிருந்தீர்சீர்பெருகவேநானும்
உம்மையறியேனுனதுடையமாதுதன்னைச்
செம்மையுடனறியேன்செல்வரோயாவருக்கும்
நல்லவனென்றேநடந்தேனுனிலத்தில்யாவருக்கு
வல்லவனேநீரும்வளமையுடனென்றனையு
மென்னவந்துகேட்டீர்நீரோதுமக்கேயில்லையென்றேன்
இன்னகாரிணீருமிருப்பதறியேனே
யென்றனையுங்கொல்லவெழுந்தோசிந்தையொன்றாய்
வந்தகனுவின்வகையையுரையுமென்றான்
வேந்தனுரைகேட்டுவேதியனுஞ்சிந்தைநொந்து
சாந்துகமழ்மன்னனீசாற்றுமுறைதனக்கு
யென்னசொல்வேன்மன்னவனேயென்னைவினைசூழ்ந்ததின்றன்
முன்னம்விதிமன்னனுக்குமுண்டவதியனும்
பாரவிடந்தீண்டியதும்பாங்காய்த்தவிழ்த்ததுவுந்
தீரமுடன்சொன்னாற்சிறந்தசபைக்கேற்காது



வேதியர்கள்தற்காலம்வீணாகவேயுரைத்தார்
நாதியவைதற்காலம்நாஞ்சொன்னாலேறாது
யேழையுரைபூவிலெவர்கேட்கப்போறார்கள்
வேண்டாயிக்கச்சேதிவிபரமுரைப்பதல்ல
யென்றுமனந்தன்னிலெண்ணிமறையோனேதுரைப்பான்
மன்றல்கமழ்மன்னனுமலைந்துவதேன்சொற்பனத்தா
ரின்றன்மனைக்கொவ்வாதாரொத்திருந்துமாவதென்ன
விந்தையுடன்பில்லிவிதித்தேதுனக்குவினை
முற்பகல்செய்தார்க்குவினைமுறையேபிற்பகலும்
அப்பகையானதுபடுத்துவந்துசிக்குமென்றே
ஒன்றன்மனைதொத்தபடியுத்தபரிகாரம்
அந்தணர்சொன்னாலாலரசேனேசெய்திடுவா
யென்றுமறையோனியம்பமனுவேந்தன்
நன்றிமறையோனளிதவுதவிசொன்ன
லெளியவர்சொல்லேறுதென்றெண்ணியிருந்தானெனவே
தெளியுமனுவேந்தன்சிறப்பாகவேயுரைப்பான்
வேதியரேவேதமறைநவிற்பனரேயாவர்களுஞ்
சேதிநெறிகேளுமெனச்செப்புவான்யாவருக்கும்
இந்நகரமியல்புநெறிசோதினையாய்ச்
சிந்தையுடன்வந்ததுவுஞ்சேர்ந்தாவந்தீண்டியதும்
மங்கையுடனந்தணனும்வாஞ்சையாய்க்காத்ததுவும்
பொங்கமுடன்சொல்லியப்பாற்பொங்குகின்றபாம்புதண்ட
மாள்விட்டெடுத்தவர்க்குமத்தாச்சிதான்காட்டி
நாள்விட்டதானுடையீர்காட்டினுங்கள்சாத்திரங்க
ளைற்காலமென்றீர்களிமங்கைவேதியனைத்
துற்காலநீக்கித்துலங்கவென்னைப்பெற்றினால்
அந்தணர்க்குப்பாலகனுமரிவையுமென்றெனவே
சிந்தையிலேறயந்தணர்க்குச்செல்வமான்கொடுத்துங்
காத்திருந்தான்வேதியனுமாக்கவேபோவன்றாசைப்
பூத்தபுகழ்வேந்தர்பொறுமைதவமேயுதவி

விருத்தம்

அவமானமெவர்க்குற்றாலுமறமில்லைப்புகழ்போம்பாவந்
தவமெனுங்கலனும்வேறோர்தாரநெஞ்சடையாரச்சந்
தவமெனுத்தனதுதாரத்தய்வுபோம்பிறனின்றேக்கார்
சிவமெனுமிவர்கேள்வித்திரிகுணமுமவர்வீடே.

ஆக விருத்தம் 37.

நடை

நீதிமன்னனன்மைநெறியபயமெங்கள்குலஞ்
சேதிமறவோஞ்சிறந்தமனுவீரம்விடோம்
இன்றென்றன்மற்குருவுமென்கரத்தின்மாண்டதினால்
மன்றலுமிற்பாவம்வருமோவெனப்பயந்து
பூத்தபுகழ்மன்னன்புகலமனுநீதி
சாத்திரத்தில்வல்லவர்கடாமுரைப்பார்மன்னனுக்கே

விருத்தம்

பக்கயந்தனக்குப்பைங்கூழ்பரிசடர்பரின்மீதே
யிக்கையோரிடத்திருப்பமிப்பிலர்கண்ணின்பூடாந்
துக்கர்கள்காக்கவேவுறடர்த்தடர்கொடியோர்தன்னைச்
சங்கைவேல்தொழுத்தநீத்தருண்கீழ்வெடித்தவாறே

ஆக விருத்தம் 38.

நடை

அடைந்தவரைக்காக்கிலதற்குவினைவருமேற்
றடர்ந்தவினையைத்துணிந்தாற்பலனுருங்
கற்புடையமாதுகல்லாள்கற்புநிலைபோகாமல்
நற்புடனேகாத்திரீர்தன்மையொடுதவமாம்
குருநிந்தைசெய்தாலுங்குருத்தம்பியில்லையென்றனுந்
தருமநெறிசெகிடந்தானைதுணிவித்திருப்பார்



விருத்தம்

படியிற்றகாதுதக்கநெனைப்பகருநெறிஞானமறந்தே
யிடியிற்கொதித்தமொழியுடையாரிருக்கச்சுமைக்குமாதேங்கு
மடிவுற்றனவுமவராக்கைமனதால்விதித்தவருங்கோலங்
கடிகிற்றிரியில்விலங்கையொப்பாங்கருதியிருந்தான்முன்னுரையே

ஆக விருத்தம் 39.

நடை

தக்கதிதுவுந்தகாததிதுவெனவும்
ஒக்கமனதிலுகந்தறியாரேமிருகந்
தண்டேசான்மணலைத்தான்குவித்துப்பத்தியொன்றாய்த்
தண்டாமறைத்தாளின்சாத்திச்சிவமாய்நினைந்து
கோவின்பாலைக்கறந்துகொண்டுவந்துதான்பொழிந்து
பூவிலவன்பூசைபுகழ்ந்தேயிருக்கையிலே
தந்தையவனதுவந்துகண்டுதாளான்மிதித்துழப்பச்
சிந்தைவெகுண்டுசினந்தனித்ததந்தைதனை
வெட்டினான்காலறவேவீழ்ந்தானேதந்தையவன்
வெட்டியுயர்ந்தபொருளீசனுமங்குவந்து
சிந்தைமகிழ்ந்துசிறந்தவரங்கொடுத்தான்
முந்தவிராவணியன்றன்றேவுலகையாருமன்
னாதிப்பொருளையவன்மறக்கப்பாலகனுஞ்
சாதிக்குமாலவனைத்தானழைத்துத்தந்தையுயிர்
கொல்லவிடுத்துத்துணைமுடனேபார்த்திருந்தான்
வல்லவரம்பெற்றவனும்வாழுகிறானென்றனும
சமுதக்கினிமுனிவர்தன்மனைவிகற்புடையாள்
அமிர்தக்குணம்படைத்தவாயிழையாண்மங்கையரும்
ஆடவன்கண்ணில்லாதவாயிழையாரைக்காண
ஆடவன்போனமுமற்றவாடவனைப்பாராமல்
நம்முடையநாயகரைநாங்கண்டிருப்பமெனக்
கொம்மைமுலைமாதுகொள்கையுடன்வாழுமன்றன்

செவ்வைகதனிற்சென்றவளுங்கெர்ப்புனைதிரட்டி
மங்கையவள்கற்பால்வுளாகிர்க்கரத்தேந்திக்
கொண்டுவருவாடனமுக்கோதையவள்பின்னெருவள்க்
கொண்டசெங்கைகிரேந்திக்கோதைவருகையிலே
ஆகாசந்தன்னிலழகுமணித்தேரேறி
வாகாகவேயாசன்வந்தநிழறன்னிலிற்
கண்டுநிழன்றூகத்தைக்கண்டதிருத்தன்னிலரும்
விண்டுசிந்தவிரைந்துமங்கைகயின்புபுனல்
தாங்கித்திரட்டிநின்றுடன்னீர்நிளவில்லை
இங்குகுடமதனிலுத்தமியுநீயெடுத்து
வந்தகுடத்தாலந்தமாமுனியுந்தான்பார்த்து
இந்தக்குடமெடுத்ததேதாமின்னவென்றுரைத்தார்
ஆடவனுந்தான்சேட்டவாயிழையும்வந்தவகை
ஆடவன்றன்னுடனுரைத்தாளாடவருங்கோபமுற்று
மைந்தனுடன்பாகராமன்றனையழைத்து
சிந்தையுன்றனுடனமைவெட்டுமெனவுரைத்தான்
தந்தையுரைதப்பாமற்றாயுயிரைக்கொல்லவென்று
மந்திரவாளேந்துமுன்னேமாதுமுடல்பதறி
போடிஞளோடிபுரத்தசெய்ராக்சதியாம்
காடியமடைக்கலமாய்க்கைபொளித்திருந்தாள்
தேடினவடன்னையுருத்தேயிவன்றுடர்ந்து
கூடியவன்னினைந்துகூறிவெட்டவாறறிவல்
ராக்கதனுமிராக்கதியுநாடியெதிர்மறித்தார்
தாக்கிமறித்தவரைத்தான்வெட்டியன்னையரை
உடல்பதறத்துண்டாபொருமித்துவெட்டினவன்
அட்டரூபுடமைபூரியாவரங்கள்பெற்றான்
பண்டாநிகிநெறிபாங்காகிழந்தவர்கள்
சண்டாளர்காணுந்தருமநெறிமன்னவனே
நீதியுடன்பூமிநெறிநின்றோர்யாவர்களும்
மேதினியிற்றெய்வமொப்பாம்வேந்தனேயென்றுரைத்தார்



விருத்தம்.

மதிநிறையானின்னிதிவளர்செறியறியாமாந்தர்
விதிவழிவாழ்வாரின்னுள்வீழுவார்நரகந்தன்னிற்
சதிருடன்பூமிநீந்தநனையடைந்தோர்மேலன்பாய்ப்
பதிபசுபாசம்நீக்கிற்பகவனுமிவர்களாமே

ஆக மொத்தம் 40.

நடை.

யென்றவர்கள்சொல்லவினியபுகழரசன்
அன்றமகிழ்ந்தேயாசனத்தவாயிழைக்கு
அன்னந்தானிலுடைமையாவுமெங்கலங்கொடுத்து
அன்னடைமாதராயிரம்பேர்காவல்வைத்துச்
சேதினையாய்க்காவலனுந்தாக்கமன்றியேகாத்து
மதிமுகடணைவன்வாகாய்வருமனவும்
அன்னையைப்போற்காத்தானுஞ்சனத்தவாயிழையை
என்னைபின்னுனைநீர்தடுத்திலென்னிதிநில்லாது

விருத்தம்.

தஞ்சமென்றடுத்தோர்சிந்தைதயங்கியேமயங்கிடாமற்
கஞ்சம்போன்முகமதாகிக்கருணையாற்காக்கநீதம்
கொஞ்சங்குன்றிக்குறிவுபொய்யின்குணமுடனபயங்காரார்
வஞ்சஞ்செய்மாந்தர்வீழ்ந்துமயங்குவார்நரகம்மீதே

ஆக விருத்தம் 41.

நடை.

அப்படியாமென்குலத்தோராரனவடைக்கலத்தைச்
செப்பமுடன்காப்பார்சிறந்தவுயிரென்னுர்கள்
மெய்யோன்குலத்துதித்தவேந்தர்புகழிழந்தால்
மெய்யாய்ப்பூமிவிறிவுதஞ்சங்காப்பவரார்
பக்கவைன்பம்வைத்தான்பாரச்சிலைவேடன்
திறமோமம்போடேறுக்கத்திலன்ரேடான்வசியனல்லன்

நம்மூரில்வந்தவனை நாமடித்துத்தள்ளிவிட்டாலச்
செம்மான்றரித்தசிவனார்க்குமேற்காகா

இன்னாளில்வேடனியம்புமொழிப்படியே
மன்னர்மதியினரேவாகாயநாளிவேல்

பேசாதிருக்களின்னட்டேபசினீராமாகின்
மாசாய்நமக்குவினைமாட்டுவதைப்போலிருக்கே

யென்னுமன்னன்சொல்லவியல்வேந்தரெல்லோரும்
நின்றுபுலம்பிநினைவுதடுமாறிப்

புழுகொழுகுமேனிப்பாவலனுமன்னேரம்
அழகுதிருவுடம்பிலாறாய்க்குருதிபொங்க

ஒளிவாளைப்பூட்டியுற்றசதையத்தனையுந்
தெளியவறுத்துச்சிறப்பாய்த்தராசில்வைத்தான்.

விருத்தம்.

நீட்டியவாளினாலேசிறந்திடுமாங்கிசந்தைத்
தாட்டிமைவீரமன்னன்சதையெல்லாமறுத்துவைத்தான்
போட்டிமையாகக்காலன்பொருந்தியபுறாவின்றூக்கம்
நாட்டையெண்டிசையுங்கூட்டினமன்னவமொவ்வாதன்றே

ஆக விருத்தம் 42.

கோலமாய்க்கிருமிவாழுங்குருதியெலும்புதாதுசதை
சீலமுடனேதான்பொருந்திச்சிறந்தவாயுவதிலடக்கி
மேலவாசறனைமூடிவெளியாம்வாசறனைத்திறந்து
காலன்வருநாட்கட்டையிடுங்கனவிலுடம்பெனவிகழ்ந்தான

ஆக விருத்தம். 43.

பிளேமூமைகோழையொடுபிணியுந்திரிந்துபேதித்தே
யேழையுடலின்மலத்தமிறைச்சிநாற்றமிவைகண்டு
வேளைசன்மமறியாதுவிரிநீர்க்குமிழ்போற்றோன்றி
நாளையழிவிழுமெனநாற்குவேந்தனுமிகழ்ந்தான்

ஆக விருத்தம் 44.



நடை.

அந்தப்புறாவினதிக்கணம்வேந்தனைசர்
சிந்தையுடன்வைத்தாலுஞ்சேர்கனமுமொவ்வாதே
அன்னேரவேளைதன்னிலரசனெலும்புவிட்டு
மன்னேறுமெவ்வளவுமாங்கிசந்தப்பாதபடி
சேரவைத்துவேந்தன்றிறல்வேடனைநோக்கிப்
பூரணமதாகப்புறாநிறைக்குப்பத்துதில்லை
இன்னாள்க்கரங்காலிதழாய்த்தரித்திவேன
மின்னுசிலைவேடாவிரும்பியேவாங்கிடென்றான்
நன்றுகாண்மன்னவனேநல்லமொழியுரைத்தாய்
இன்றுசதைபத்தாதேயென்புறாவிந்துவிடு
அந்தப்படியருளாயாகிலுமோபோர்வேந்தா
இந்தப்புறாவையியல்பாகவுஞ்சதைக்கு
ஒப்பந்தந்தானறத்தேவுஞ்சதைக்குமிஞ்சினதைச்
செப்பமுடன்றந்துவிடுசீர்வேந்தாஞாயமுடன்
இறைச்சிநான்கேட்கவிலுமபைநீதாரனென்றாய்
மறைக்கிசைந்தவேந்தாயிவ்வார்த்தையுனக்குச்சரியோ
யென்றுநான்கூறயிறைவன்வெகுகோபமுற்று
நன்றுபறவைதனைநான்கொல்லச்சொன்னதுண்டோ
அந்தப்புறாவுயிருக்காகவெனதுடலை
யிந்தப்படியறக்கவிப்படியுஞ்சொல்வர்களோ
சதையையுடம்பதனிற்றுணித்துக்கொண்டேனே
சதையதிலேயாவைதவறிவிட்டேன்வஞ்சனையோ
யென்றரசன்கூறவெலும்புதானியுமென்றேறும்
மன்றிலாசன்மகாவீரகுத்தனன்றாக்
குருதியாறோடவேகொண்டவச்சிரவாள்பூட்டி
அரிதுவுமேதறித்தேயானதட்டினமீதுவைத்தான்
அப்பாரம்பற்றுமலானபுறாநிறைக்கு
ஒப்பாரெனவேவுயர்சிரசையீவனென்றான்

அன்னோர்ந்தன்னிலரசன்றனைநோக்கி
இன்னேரமுன்சிரசையீவாயெனவுரைத்தோம்
அமைச்சர்முகநோக்கியரசனெனதுசென்னி
நிமைப்பளவில்வேடனுக்குநீங்களறுத்தீயுமென்றான்
அந்தவுரையைக்கேட்டரசையிழந்தோமெனவே
சிந்தையழன்றழுதுதென்னவனதுசென்னி
கத்தியினல்வெட்டுவதுகன்மமேயாவருக்குங்
கத்தியினன்மாளக்கருத்தின்றேவென்றழுதார்
சங்கைச்சிவனுனைக்கடவாமலேநாமுஞ்
சங்கைவருமளவுந்தான்கொடுப்போநாமெனவே
அப்போதுவேந்தனவர்கண்மனதறிந்து
தப்பாதுவேடாதலையறுத்துக்கொள்ளுமென்று
னவ்வார்த்தைசொல்லவரசர்மனுநீதிமன்ன
னெவ்வளவுநாமறுக்கிலுத்தபழியென்றுரைத்தோம்
அந்தவுரையைக்கேட்டரசன்மனுநீதன்
சிந்தையுடனென்சிரசைத்தீண்டேனெவருமென்று
லென்றன்சிரசையெனதுகையாற்றனறுப்பே
னந்திமதிசூடியின்மேலாணைமறப்பேனே.

விருத்தம்.

குடுக்கவேசிரீனவாராகிற்குறைவன்றிச்சிவணக்கம்
விடுக்குநாள்வரினுயிர்தால்வேதன்மாலனையொப்பர்
தடுக்குமாமனதுசிந்தைதருகிறேயகடுவின்மாறி
லடுக்குமாம்விழிக்குமாறிலடர்ந்திருள்பாவமொப்பாம்.

ஆக விருத்தம் 45.

கடை.

சங்கைவருமளவுந்தான்கொடுப்பேனென்றுமன்ன
னங்கைவச்சிரவாளாலரசன்வெகுதீரன்
கத்திதனைக்கழுத்திற்காவலனுந்தான்பூட்டிப்
பத்தியுடனறுத்தபார்வேந்தனைநாமுங்



தென்னவனைவூட்டிதெறித்துவிழச்சிக்கிரமாய்
மன்னவனேதாவென்றேமன்னனறுத்தான்றிடமாய்ச்
சித்திரமதானசிரசுகண்டமூட்டியறக்
கத்திதனைப்போட்டறுத்துக்காவலனுந்தான்சாய்ந்தான்
மன்னன்மேனுமும்மகிழ்ந்துதயவாகி
அன்னவன்மேலன்பாயதிகமகிழ்ச்சிபொங்கி
யென்றனுடம்புமியல்வேந்தன்றனுடம்புஞ்
சிந்தையுடன்சேரச்சிறப்பாகவேதழுவி
ஒட்டிபொருந்தியுடம்புமிகவேபொருந்தி
வாட்டமற்றசிந்தைமனமகிழ்ச்சிமேலாகித்
தங்கசிறைகாமுந்தான்பொருந்தினனரசன்
தக்குபுகழ்வேந்தன்றான்காணவுமறைந்தோம்
மன்னன்சிவனெனவேவாகாகவேயறிந்து
சின்னமதிசூடுஞ்சிவனேபராபரனே
அடியேனைத்தப்பாகவடிகளேனிக்காளிற்
கடியசிலைவேடரைப்போற்காட்சியுடனின்றீரோ
வென்றரசனேங்கவியலரசனேங்காம
லன்றுவரங்களனேகசெல்வந்தானுதவித்
தென்னனரசுசெய்துசெங்கோன்முடிந்ததன்பின்
மன்னவனைவெள்ளிமலையில்வைத்தோமென்னரும்
ஆதித்தன்வங்கிசத்தோராணெறிநீதி
சாதித்தல்பூவுலகிற்றனெவர்க்கும்வாறுதே.

புறக்கதை முற்று.

முன்னொருசோழன்முழுதுமெனைநினைந்து
அன்னாளரசுநெறியாய்ச்செலுத்துநாளையிலெ
துட்டரவர்நாட்டின்முடிசேரிசலரசர்
திட்டமிவனுட்டில்வந்துதிக்கொருத்தினரெனவே
சோழன்றனைக்குத்தலங்குங்கெடுச்சிட்டை
யாளின்றிறலானுக்கனுப்பினார்மன்னவனுந்

தங்குபுகழ்வெந்திந்தாரான்கொலுவிருந்து
அங்கனெழுந்தலைக்குமாரன்மனைக்குப்
போகவெதிராய்ப்புகர்சிட்டுத்தாளிந்தார்
வாகுபுகழ்மன்னவனும்வாசித்தானன்னோருஞ்
செங்கண்சிவந்துதிறல்வேந்தர்மந்திரிமார்
தங்கண்முகம்நோக்கித்தரணிவெற்றிவேந்தன்
சீக்கிரமாயிவ்விருளிற்சென்றுவஞ்சன்றன்கோட்டை
தாக்காயிடித்துத்தலையறுத்தான்கொலுவில்
வாறதற்குமுன்கொண்டுவந்துகுவியாதுவிட்டாற்
சிறியுங்கள்கண்ணைச்சிதறடுவேனென்றும்மன்னன்
சென்றனரன்மனையிற்றென்னனுரைகேட்டே
யன்றேகரிபரியுமானமகாசேனையுடன்
சென்றுபலத்திடித்துச்சென்னிதனையறுத்தே
யன்றுபொறியன் றுராசர்களும்பிழைத்தார்
வந்ததலையத்தனையும்மன்னவன்முன்னேகுவிக்க
அந்தச்சிரசுகளிலாசடைவீறுடனே
வேந்தர்களாண்டிதன்மேல்வரக்கண்டாசன்
மாத்தார்தம்சென்னிவளைதக்கமழுவேந்துமான்
பத்தர்சிரமொக்கறுத்தபாவங்கொலைப்பேனென்வே
மெத்தவன்லோமமேதினியிலுன்டெபன்னனி
திக்கிற்றருநீகான்செம்பொன்றுனக்கொடுத்து
தக்கபுகழ்மன்னன்சடைத்தலையைக்கையேந்தி
யக்கினியைச்சுத்தியரசனனல்வீழ்ந்தான்
மிக்கவரசன்பிருந்தவனல்வீழுமுன்னே
புட்பாதமேத்திப்புரந்தரற்குமப்பாலே
நட்பின்கயிலைவரைநாஞ்சேர்த்தோமீசுரியே
பின்னுமொருவெந்தன்பெருகுமந்தலூர்தனிலே
யென்னைநினைந்தேயொருவனைமுப்பாயித்தியவான்
காட்டிலொருகல்லைக்கருணைலிங்கமென்றாணி
காட்டிற்பலபூக்கருணையுடனேபறித்து



சென்னிதனிற்சூட்டிச்சிறந்தசெங்கைவாளேந்தி
தன்னினைவில்லாதுடித்தான்றிரியுமக்காட்டின்
மன்னவன்றனானைமதம்பொழிந்தேயக்காட்டிற்
றன்னியேசீக்கிரமாய்த்தோனுமந்தக்காட்டில்வந்து
வீரவெறிப்பத்தன்மிகச்சாத்திலிங்கமலர்
தீரமுடனேசிதறவவன்வாளோங்கி
வெத்திவெறிப்பத்தனென்போன்வேழத்தின்கையைவெட்ட
அத்திமடிந்ததுவேபத்திபின்பின்போனவர்கள்
திங்களணிந்தசிவனடிமைமுத்திலையோர்
பங்கமிகச்செய்தாலும்பார்வேந்தன்றான்பொறுப்பான்
மன்னறியாதிவனைவாசாய்நாம்வென்றாலுந்
தென்னன்சினப்பானெனவேதென்னனுடனிச்சேதி
சென்றுசொன்னார்வேந்தன்றிடுக்கிட்டெழுந்திருந்து
மன்றல்வெறிப்பத்தனிடம்மன்னவனும்வந்துநின்று
தீரர்க்குச்சிங்கஞ்சிறந்தபாதேசியர்க்குப்
பாரிற்பயமகற்றிப்பாராளும்போர்வேந்தன்
குஞ்சரத்தைவெட்டினதுகுற்றமென்றமெண்ணமை
லஞ்செழுத்திலிங்கமரியசிரசின்மலர்
சிந்துகரியைச்செயித்ததுவுஞ்சரணே
அந்தமதயானைபட்டதாதிக்குமேற்காது
யென்றனையும்வெட்டிவிடுமிந்தாவாளென்றபிரான்
விந்தைக்கயிலைவரைமேவினனுபிழையே
பின்னுமொருவேந்தன்பெருவீதிதான்சேர்ந்து
பின்னுகொப்பின்வேம்புபெருகுபழமுதிர்ந்து
போதக்கிடந்ததையும்போர்வேந்தனுனெடுத்து
நீதமுடன்பார்த்தானிறைந்தலிங்கம்போலுருவாய்
சீரிலிங்கங்கல்காய்க்குஞ்சிறந்தமரம்வீதிவெயில்
நேரினிற்குமோவெனவேநேர்வேந்தனெண்ணமுற்று
கூடாரச்சேலையெல்லாங்கொண்டுவந்துவேம்பினுக்கு
நீடேழிகாலநிறைந்தநிழன்மீதுசெய்து

பூசைசிறப்புப்பொலியவைத்தசீர்வேந்தன்
நேசமென்றன்பக்கனிலிருந்தானுயிழையே

இல்லைவனங்கண்டதிருச்சோழனென்றொருவன்
தில்லைவனமொய்யர்திருமுடிமேற்சாத்துதற்கு

காரணமாம்புட்பஞ்சருணையடியாரொருவன்
றாணியிற்கண்டன்பன்றானெடுத்துவந்து

திருப்பூவின்மண்டபத்தைச்சேர்ந்துமலர்தொடுக்க
ஒருபூச்சிதறியொதுங்கித்தரையில்விழ

மண்டலத்திலுமன்னன்மனைவிசிலமாதருடன்
கொண்டைவிழும்பாள்திருவைப்புடனக்குவந்து

திருவளையமாதிதுமலர்ந்தவோர்பூவை
மருவுசந்தமாமுகமாதுமகிழ்ந்தேபார்த்து

செந்தாமரைக்கரத்தாற்சிந்துமலரெடுத்து
மொந்தாளோசிதனின்வாய்க்குழலாளன்னேரம்

மன்னவன்றன்றேவிமலர்முகப்பக்கண்டிவன்
தென்னன்மகிடேவியென்றுசிந்தைதனிலெண்ணமற்

கத்திபிறன்மூக்கைக்கடிதிவளறுக்கப்
பத்திபிவன்மூக்கறுக்கபைந்தொடியாடான்வெருவி

வேந்தனிடஞ்சென்றுசொன்னாள்வேந்தனுமேகொப்தவனை
சாந்தகமாய்ப்பேர்வேந்தன்றானழைத்துநீதியுடன்

இருவர்மொழியுமியல்வேந்தன்றான்கேட்டு
மருவுசுந்தமாதினுக்குவந்தகுற்றமுன்றானதா

மீசர்முடிமேலியல்புமலர்சாத்துமுன்னே
வாசமுடன்கண்டகண்ணைவாகாகவேபிடுங்கி

தாங்கியெடுத்தசெங்கைதானறுத்துப்பூமுகந்த
பாங்கினிறைமூக்கறுத்தாற்பாரிலிவைசரியா

முக்குற்றமாதினுக்குமெண்டிருக்கமூக்கறுத்தே
அக்குற்றம்மொண்டின்புமாயிழைக்காய்விட்டுவிட்டான்

னென்றேயரசனியம்பநெறிநீதியினன்
மன்றல்கமழ்பாதுமலர்மூக்குமொட்டியதே



செப்புமுகிலமாதுமுகந்திங்களைப்போலாகியதே
அப்படியுமோர்சோழனரணங்கேபின்னொருவன்

மீனின்வடிவுகொண்டுவேலையொளித்தேயரக்க
னுனபுவனமழித்தானழிந்திடவே

அந்தவகைவேந்தனறிந்துவலைவீசி
வித்தைதெரிராட்சதனைவெந்துக்கொன்றுவிட்டான்

எதிர்க்குங்கிரோனெழுகையிலேயோர்பனைதான்
மறிக்குமந்தகற்பனையைவாளாலேவெட்டினவன்

தேவர்க்குத்தாதுசென்றதென்னன்புகழ்ச்சோழன்
யாவர்க்குங்காயாயாசுகிறுத்தவல்லான்

முற்கதைமுற்று.

தப்பாமனுநீதத்தக்குபுகழாளர்
அப்போதவர்களிலுமன்பானிவனெனக்கு

மன்னர்வணங்குமகாசேனைசூழ்ந்திருக்க
தென்னனறிவுடனேதேசத்தையாளுகிறான்

அப்படியேவாழுமரசன்மனுநீதி
இப்படியிற்காணகமக்கின்பம்வருகுதின்றான்

போகநாம்வேணுமென்றார்பொங்குசடைமுடியார்
நாகமணியீசானார்நாடியுரைத்தசொல்லைப்

பரமேசுரிகேட்டுப்பண்புடனேதெண்டனிட்டு
அரனேயிவன்பாலணுகுவோம்வாருமென்றாள்

விருத்தம்,

அளிகள்விரும்புமலர்ச்சந்தையடுவேகூட்டுந்தெளிரசம
விழிகள்காணப்பலர்விரும்புமிருந்தமதியோர்கமைத்தேடும்
தெளியுமவருக்கெளிவிலருஞ்சிறந்தவுலகிற்சலந்திருப்பார்
வெளியிலனைமீர்பாலருந்தும்விகமாயுரிவோம்வருகவென்றாள்.

ஆக விருத்தம் 46.

நடை

அப்போதுசத்திதன்னையாதியிடந்தரித்துத்
தப்பாதசோழன்சமத்தறியவேணுமென்றே
யெம்மையும்வாவெனவேயீசுரனார்தாமழைத்தார்
சோமன்றரித்தசடைச்சோதியுமைகேட்டே
அன்னாட்புருவுருவாயானபுகழேமன்
இன்னாளில்வந்துசிறந்தீசுரரைத்தெண்டனிட்டு
வந்தநமன்றன்னைமகாதேவர்தானோக்கிச்
சிந்தைமகிழ்ந்துசிவனாருமேதுரைப்பார்
நீதியுள்ளசோழனெறியுமவன்றவமுஞ்
சோதினையாய்ப்பார்க்கத்துடங்குவோம்வாருமென்றார்
அந்தவுரைசொன்னவரன்பாதந்தெண்டனிட்டு
விந்தைப்பொருளாய்வெளியொளியாய்மூன்றுகண்ணாய்
ஐமுகமாய்நான்முகமாயாறுமுகமோருருவாய்
மெய்தவஞ்சேர்வேறாய்மிருத்த அகாரமுதல்
எட்டிரெண்டுமூன்றெழுத்திலேகவுயிராகி
யெட்டுருவிஇயலோசைக்கப்புறமாய்
தங்குங்கருவிபுலன்றனையறியாவஞ்சனையாய்
திங்களணிந்துசிறந்துமெங்குந்தானிறைந்து
அந்தநடுவோரயன்மாலறியாமன்
முந்தமறைநாணுதமூர்த்தியேசோழனிடம்
சிந்தைமதியுந்திட்டனுமிகவறிவோம்
அந்தமதிருடுமானேயெழுந்தருளு
மென்றுநமன்சொல்லயீசுரனார்சத்திபங்கன்
மன்றில்வரைகடல்பூவாழுமரிவேதனான்
சக்கரஞ்சூலந்தண்டுதார்துளசியக்குமுன்னான்
மிக்கவொருமூவிரான்றும்மேலாம்பராபரத்தோன்
திங்களணிந்துதிருச்சடையிற்கங்கைவைத்தோன்
துங்கர்புகழ்சோழன்றனிவறியவேணுமென்றே



ஆறணிந்தசெஞ்சடையாராண்டிவடிவானார்
நீறணிந்துகாவிநிகர்கலையுந்தாழ்வடமும்
வேடந்தரித்தரனார்மேருகிரியைவிட்டு
சேடன்றரித்தசிவனாருந்தானெழுந்தார்

விருத்தம்.

அண்டப்புவனம்வரைபரவையனேகசெனனம்படைத்தோனும்
விண்டரையுமேயளந்தோனும்வியந்தேயறியவரிதான
தண்டப்பிறைதரியின்கிரீடமணிசோதியருபச்சுரூபன்
கண்டங்கறுத்தவாறுமையுங்கலந்தோருடலாயெழுந்தாரே.

ஆக விருத்தம் 47.

நடை.

சண்டனவன்பின்னடக்கச்சங்கரனார்முன்னடந்தார்
தண்டகக்காவோங்குந்தாரணியிலீசரவர்
பார்மாதுதான்மகிழ்ந்துபாதந்தனைத்தொழுது
சீர்பாதங்காணவின்னாட்செய்ததவமென்றுரைத்தாள்
கானகத்தில்வேங்கைகரடிபுலிகுஞ்சரமு
மானகத்திலொளிமரைவேங்கைமாடுபன்றி
நாகத்திருந்துவருநற்கானில்வாழ்ந்தவும்
நாகந்தரித்தருளுநாயகர்வந்தாரெனவே
கண்டுவணங்கியதேகாட்டிற்பலமிருக
மண்டிவணங்குமனேகமிருகமதைப்
பண்டைமறைகாணாப்பரனார்மனமகிழ்ந்தே
தண்டகத்தில்வாழுமென்றுதானடந்தாரீசுரரு
அப்புத்தரித்தவரனார்வந்தாரெனவே
கூட்டமாய்ச்சோலையிடங்கொண்டேதும்வண்டினங்கள்
வண்ணமயிலன்னம்வனக்கடனைச்சூழ்ந்து
மண்ணுலகிலாடும்வளமையரனார்மகிழ
வனத்தில்வளர்பிச்சிமுல்லைவாசமலருள்ளதெல்லாம்
கனத்தமலர்சொரியுங்காரணனார்பாதமதில்

கோவேறுமீசரனார்கூறிமகிழ்ந்தின்பமதாய்
காவேரியாற்றில்வந்தார்காரணருமன்னேரம்
வந்தவரனார்பாதம்வணங்கினாள்காவேரி
கந்தர்திருத்தந்தையர்தாள்காவேரிதெண்டனிட்டு
ஆரனூர்க்கதிசயங்களாயிழையாள்காட்டவென்று
வரமுடனேபொங்கிமகிழ்ந்துசெங்கையாற்பரித்து
மஞ்சளிஞ்சிமாவும்வளர்பலாத்தேன்வாழை
கஞ்சமலர்முல்லைகளைத்தபிச்சிவெட்டியுடன்
தேக்குமாமுந்திகழ்சந்தனமாமுந்
தாக்குடனேமோதியெதிர்சாடிவெருதிராய்
தும்பிதனைத்தூக்கித்துங்கசிங்கந்தானுருட்டி
கும்பித்திரைமோதிக்கொண்டதிர்ந்தேவோசையதாய்
பருவதத்தைப்போலபருங்கல்லைத்தானுருட்டி
செருவிதங்கொண்டப்புக்கிளம்பிச்சமுத்திரம்போல்
வரையிலுள்ளகாவனமுமான்வேங்கையத்தனையும்
தரையிலுள்ளகாவனமுந்தான்பிடுங்கிக்கொடேறி
சுழித்துச்சுருட்டித்துடர்ந்துதிசைபரந்து
கொழித்துமணல்சிதறிக்குஞ்சரம்போல்வேகமுற்று
கவடிரக்கரைநெளியக்கரைதிரளத்தரைபரவ
குவடிரவேகுலுங்கக்குமுறியிடியாற்பக்
கொப்பளித்துப்பொங்கிக்குமுறிமிகமுழங்கி
அப்புதரித்தசடையாநிகுலுப்பையெம்ப
உடுவரைகள்கட்டியுகந்தமலர்ப்பாதங்
கடுகவேதெண்டனிட்டாள்காவேரியீசரை

விருத்தம்.

கடல்வடகனலிலும்வலுவெனமீறிக்கனவரைகுவடிடமதில்வளர்நெடுநோட்
படியிடைகடநிலைகுழியடையனுாப்பாஸ்வயன்றெழுவதும்
படர்வதுமொத்தே



திடமுடனருள்புரிவதுகடலைச்[illegible]மறவாதிடிபோலக்
கடிதிடதடபடிபெருகிடபுனலின்கறைமிடறாருள்மகிழ்வுறவருமாறே.

ஆக விரு[illegible]ம் 48.

மஞ்சளுமிஞ்சிமாவும்வளர்பிலாவேயலங்கன்னல்
கஞ்சமாமலருங்வாசங்கதித்திடுமலருந்தோப்பு
மிஞ்சுமாம்பிலக்குச்சிங்கம்வேகித்தகரியும்வேங்கை
மஞ்செல்லாம்வளருநாகம்வரையெல்லாமுருட்டிவந்தாள்.

ஆக விருத்தம் 49.

உருட்டியேதிரையாற்பொங்கியோதுங்கியேசுழித்துமோதி
மிரட்டியேகதித்துச்சுத்திப்பெருகியேயிடியேறென்னத்
திரட்டியேயசண்டேயெங்குந்திசைதிசைதாவியாவி
விரட்டியேதன்னுட்கொண்டுவிமலனைக்கண்டாள்கங்கை.

ஆக விருத்தம் 50.

பஞ்சிலையுழவைகெண்டைபறவையுங்குரவைதேளி
மிஞ்சியமகரம்வாளைவெளிச்சியுங்குதித்தப்பாயக்
கொஞ்சியகுமிழிசுத்திக்குன்றவர்குடிலேற்றுக்கி
அஞ்சியேயொதுங்கிக்கங்கையரனடிவணக்கஞ்செய்தாள்.

ஆக விருத்தம் 51.

நடை

காவேரிகொண்டுவந்தகட்டுமுலுப்பைதன்னை
கோவேறுமீசன்குறித்துமிகமகிழ்ந்து
இக்கரையிற்றானிருந்தயீசருமேமனுடன்
அக்கரையிற்சென்றாடர்ந்தமலர்க்காவிற்
காவின் [illegible]ன்மதனிற்காரணரும்போயிருந்து
கோவில்வருமீசாருங்கூற்றுவனோடேயுரைப்பார்
பாரிலடியார்களுன்னம்பத்தியறிவதற்குச்
சிறுகலைலென்னவிதஞ்செய்வோமடியவரிற்
துன்பமின்பம்ரெண்டாய்த்துடங்கும்வறுமைசெல்வம்
அன்புறுதறன்பமறிவுபெருக்துன்பமொன்றும்
பத்திதவிழ்செல்வமொன்றும்பத்திநிலைசெல்வமொன்றும்
நித்தமறவாவறுமைநீக்கும்வறுமையொன்று

கவலையழுகைகசிவிருக்க[illegible]
அவலநகைப்புமசூயத்திலோர்நகைப்பு

தனக்கேயிடர்பயமாந்தானடரவோர்பயமாம்
கனக்கயிருப்புக்கனமாநடைவிழிப்பு

நித்திரையும்பின்மாறிரீண்டுநினைவெவர்க்கும்
பத்திரமும்பத்தியில்லார்பாசநினைவேயவமாம்

நன்மைதனில்நினைவாய்நாடுவோர்நீறதவந்
இம்மைமனதாவார்க்குத்தீங்குவிடுமுன்றவமே

உருமையிலாதவருக்குதவாதமுன்றவமே
குருமந்திரத்தைக்குணமாகவுள்ளம்வைத்து

யென்றுநினையாதவருக்கிங்குமில்லையங்குமில்லை
யின்றுநினைந்தோர்மறந்தாலெய்துவாரோநரகம்

பக்ஷிமிருகமொப்பார்பாரிலறமில்லாதார்
ரக்ஷிக்கும்தேவரொப்பாராடும்வயிராக்கியத்தோர்

மன்னனுக்குத்துன்பமகாகொடுமைமூட்டிடினும்
வின்னமுடன்சதையைவீறாய்றுத்தவர்கள்

யேதுகொடுமையிலுமேங்கார்தவமறவார்
நீதமறவார்நிலையிலகாரென்னாளும்

சிந்தைகலங்கார்களெய்ப்புமொழிகள்பொய்யார்
வந்தவினையில்வயிராக்கியந்தவறார்

பாலனெனுமோராசைபாரதனிலெவ்வுயிர்க்கும்
சாலவுயிர்தங்களுடறன்னிலதிகமைந்தர்

தன்னுடலைவெட்டமனந்தானொருத்திருந்தாலு
இன்னின்மைந்தர்மீதிலெறும்புகடித்தாற்பொறுக்கார்

விருத்தம்.

மைந்தராசையெவராலுமதிக்கவரிதனதுடலைத்
சிந்தவிழுந்துசிதறிடினுந்தீரஞ்செலுத்துவீரனென்றுக
கந்தமகவைபெறும்புதொடக்கவலைபொருகார்முனம்விசையன்
சொந்தமகவைத்துணித்தமகன்றுஞ்சமடியத்துணிந்தானே.

ஆக விருத்தம் 52.



[illegible]

மைந்தன்மேற்குற்றம்வருத்தியேவன்பாலகனை
சிந்தையுடன்கொல்லுந்திடமறிவோமன்னனுக்கு

பாருலகையாளுமிந்தப்பார்வேந்தன்மைந்தனறிச்
சீருலகினெஞ்சந்தியங்கிகொக்குசிந்தைபுண்ணாய்

மருவிகழ்ந்ததிங்கண்முகமாதுமனுனமாய்
தாவியந்தேவொன்றதுபோற்றுனதன்மமேநிறைப்பித்

கன்னிகாதானங்கனத்தபார்நற்றகிலும்
அன்னசொர்ன்னதானமருளியெவர்களுக்குஞ்

சிந்தைநிறைமன்னன்சிறப்பாய்மனமகிழ
அந்தருட்பாலனருளினோகாயிவற்கு

செண்ணிமாதேவிசிறக்கமனமகிழ்ந்து
கன்னன்மகனொப்பாய்க்கதித்தமைந்தன்பெற்றெடுத்தாள்

ஈன்றமதலையின்மேலின்புற்றிருவர்களும்
தேன்றுளிக்குக்காராலுந்தேவியருமின்பமுற்று

புதல்வன்மேற்சிந்தையதுபூண்டிருவராசையொன்றாய்
மதலையின்மேலன்பாய்வளர்த்தாராலதினமுங்

தங்கப்பணிதியுடன்றண்டைாற்பினப்பொற்சதங்கை
பொங்குமுத்துச்சுட்டிபுனிதமுள்ளதாழ்வடமும்

பொன்வினைரஞ்ஞாலும்பொற்கடகமோதிரமும்
மின்னிதெளிவச்சிரத்தான்மிக்கதங்கமாலையிட்டு

வச்சிரமுநீலமரகதமாணிக்கமுத்து
அச்சிட்டழுத்துதொட்டிலாட்டிவினையாடி

நீங்காமற்பாலனினைவிலகலாமல்
வாங்காமற்சிந்தைமதலையின்மேலன்புபற்றி

ஆண்டுவயதஞ்சிலரியதமிழ்பயிற்றி
வேண்டுநெறிகேள்விமறைநவித்தாரநால்வருத்தி

வீதிவிடங்கனெனவிற்பனற்றுபேருமிட்டு
ஓதும்பலபாஷையுத்தமிக்குவித்தைகளும்

பன்னுபுராணம்பலநூல்பயிற்றிவைத்து
கன்னற்சிலைமதன்போற்காசியுற்றப்பாலகனும்

மாளிகையைவிட்டுமதிலைப்பாலோர்கிமிட
நாழிகைபுகீங்கரமனுடியரசன்றயவாய்

மன்னனொருசெப்புமனையாளொருமுடி
கன்னன்மதனைப்பொன்கலந்தசெப்புள்வைத்ததுபோல்

விருத்தம்

பூவிற்புனிதநெறிவேந்தர்புகழிற்புனிதமியலோர்கள்
காவிற்புனிதம்வாசமலர்கருணைக்கழகுபொறுமைதவம்
நாவிற்கழகுநல்வசனம்நாட்டிற்புனிதங்கற்புடையார்
ஆவிற்காமதேன்புனிதமலைவயர்பிரமாமகவாசை

ஆக விருத்தம் 53

நடை

ஆகமுமிருமொன்றாயாயிழைபுமன்னவனும்
தாகமுடன்பாலகன்மேற்றானிருக்குஞ்சிந்தையொன்றாய்
ஆண்டுபதினாறுமாகியருள்புதல்வன்
வேண்டுஞ்சுகத்தினிலேவீற்றிருந்தான்மைந்தனுமே
இந்தப்படியாயிருக்குமகிழ்ச்சியினால்
மைந்தன்றனக்குமகாபழிகடான்விளைந்து
பழிகுலைகள்செய்துமவன்பதிதனையறிவோர்
தெளிவுநிலைநின்றுற்சிறந்ததவமுற்றவனும்
மென்றுமவனாண்பாயிருக்குமந்தப்பாலகனை
மன்றலைமேமாவரவழைப்பேன்வீதியிலே
வீதியிலேபாலன்வெளியல்வரும்வேளையிலே
சாதிப்போமிக்கபழிசாத்துவோமென்றுரைத்தா
ரவென்றேயமனானையலைழுமென்றார்
தாமென்றுசெஞ்சடையார்தாரணியையாளுகின்ற
காவலவன்பாலன்கருத்திலெழுங்குணத்தில்
ஆவலுடன்மாலையருளுனையப்பன்னைமதன்



சிந்தைநிறைமுக்குணமுஞ்சேர்ந்தறிவாலேயெழுந்து
தந்தையிடம்வந்துநின்றுதந்தைதனைத்தொழுது
ஐயரேநானுமழகுமணித்தேரேறி
வெய்யபுகழ்வீதிவரவித்தகரேயேவுமென்றான்
பாலனிவைகூறப்பார்வேந்தனின்புற்று
சீலநெறிமைந்தன்சிறந்தநெறிராசாங்கம்
சூட்டவயதானலக்கியதாமென்றறிந்து
நீட்டுபுகழ்மன்னனுக்குத்தென்னவன்கிரீடம்புனைய
வேதியரைநாலுவரும்வித்தகரைத்தானழைத்து
ஓதியறிநாளையுரையுமென்றார்காண்முகூர்த்தம்
அந்தணரும்நூல்விரித்தேயன்றுவிலாராய்ந்து
வந்ததிதிவாரமகாநாளுமிராசி
ஆருதிசைகரணமாநிதிகோதிங்கள்வெய்யோன்
பாவுநலமோலைபகர்மறையோராய்ந்து
மன்னவனைத்தேரேறிவாணகரம்வீதிவந்து
பொன்னின்முடிசூட்டப்பொருந்துமுகூர்த்தமின்னுள்

விருத்தம்

வெட்டிநற்பிறைத்தோன்பன்னிரெண்டிலிருக்கோணலமூன்றேழு
மொட்டியிருக்குமாறினலமுகத்தயேழுமோனையிலக்
கெட்டிவிதுவாமுகர்த்ததிசைசெணிதகலையுங்கதிரவனும்
அட்டியிலேயோதமேறவரசர்யோகமென்றுரைத்தார்

ஆக விருத்தம் 54

ஆயிரங்கரமுடையவனெதிர்வளர்வோன்
ஆயிரம்விழியினரவர்புகழினையாம்
ஆயிரமுடியுடையவர்பெலியவராம்
ஆயிரங்கொடுமுடியுடையவரையேயினிறைவாம்

ஆகவிருத்தம் 55

நடை

அந்தவுரைகேட்டரசன்மனமகிழ்ந்து
மந்திரிமார்வேந்தரையும்வாருமெனஅழைத்து

இந்நகர்ப்பட்டமெனது மகன் றனக்குச்
சிந்தையுடன் சூட்டச்சிறந்தநகரமெல்லாம்
தங்குபொன்னின்மேடுமுத்துக்கம்பம்வயிரந்துலங்க
திங்கட்ருவிலங்கச்சிங்காரஞ்செய்யுமென்றான்
அந்தநிமிடமதிலானநகர்வீதியெங்குஞ்
சுந்தரஞ்சேர்பொன்ன[illegible]தாதாய்த்துலங்கிடவே
வீதிதனைநன்றாய்வெகுவாயலங்கரித்து
நீதிநகர்வீதிநிறையத்திசைதோறும்
தோரணங்கள்கட்டித்துகிர்கமுகுதெங்குடனே
வீரைபலாக்கன்னல்பிசவீதியெல்லாந்தானிறைத்தார்
வெட்டியெனுமிச்சைமிகுந்தகட்டிச்சிங்காரம்
கட்டியிலங்கக்கனத்தாதநிறுத்தி
திக்குத்திசைகளெங்குச்சீராகச்சிங்காரம்
மிக்ககனகமிகுந்திலங்கவொப்பமிட்டார்
அன்னோரந்தன்னிலரசனருள்பாலகற்கு
மின்னுசகந்தனுதிமிகுகளபநீர்முழுகி
பச்சைவயிரம்பருத்தமுத்துமாலைகளும்
இச்சைபுட்பராகமியனுமாணிக்கவடம்
பொங்கமுடன்பணிதிபூட்டிரெம்பக்கஸ்த்தூரி
சங்கைபன்றியேபுழுகுசாந்துசவாதுதிமிர்ந்து
தங்குபீதாம்பரமுந்தங்கவளைஞாண்பூட்டி
செங்கைவிரன்முத்திரையின்சீராழியேதரித்து
தங்குமிருகாதிற்றருமகரகுண்டலமுஞ்
செங்கரத்திற்காப்புச்சிறப்பாகவேபுனைந்து
துமசிலைறப்பிவுயர்ந்ததவங்கள்செய்து
சேமமுறுஞ்செங்கோனிறைந்தகரத்தேந்தி
தங்கக்கிரீடமதுதான்புனைந்துசென்னியிலே
தங்குதிருநாடுதனக்குமைந்தன்சோழனென
மாணிக்கமுத்தாத்தினம்வச்சிரமுநீலமணி
ஆணித்தங்கமாடசொர்ன்னமயாசனமேற்பார்க்குப்



போதமிகவேகொடுத்துப்பொன்னின்றேரொப்பமிட்டு
காதலுடன்றேரிற்கனத்தகொடிபொருத்தி
தங்குரதத்தினைப்புட்பசாந்தாரின்றுகிர்தூக்கி
தங்காதந்தன்னைத்தருகவிதானமுட்டு
கந்தமணிந்தகனகமணித்தேரை
சிந்தையுடனேசிறப்பாகக்கொண்டுவந்தார்
அத்தேரைநோக்கியரசன்மனமகிழ்ந்து
இத்தேரிற்பாலகனையேறுவாயென்றுரைத்தான்
ஈராறுநாலுவயதேற்றுவளர்பாலகனுந்
தேரேறத்தந்தையன்னைசீர்பாதந்தெண்டனிட்டு
அரண்மாலயனுமையாறுமுகவேலவரை
திருமாதுபார்ப்பதியுந்தேவிநாமாதுதனை
சிந்தைதனிலேதியானித்துத்தெண்டனிட்டு
கந்தநிலைநீறணிந்துகாட்சிரதநோக்கி
மேருகிரிகயிலைமீறுமண்டர்சொர்க்கமெனச்
சீரினிறைதேரிற்சிறந்தமகிழ்ச்சியுற்று
வீதிவிடங்கனெனும்வேந்தர்கோன்றனேறிச்
சேதிநிறைவீதிதிரோடேர்நடத்தலுற்றான்
குப்பமுடன்சேனைகுதிரைத்தளஞ்சூழ
வப்புக்கடலெனவேயானைதிரண்டுவர
மன்னரமைச்சர்வருந்தேருஞ்சூழ்ந்துவரத்
தன்னிகரிலாவீரர்தாலமுதற்றேசமுள்ளோர்
நச்சிரமணந்தருணெருங்கவீதியெங்கு
மச்சமிலாவீராடர்ந்துகடலாய்நெருங்க
வண்ணமிகும்பூச்சக்ரவாளக்குடைநிழற்ற
மின்னிலங்குடால்சுருட்டிமெத்தத்திரண்டுவரத்
தங்குபுகழ்க்கட்டியங்கடாங்கூறச்சாரங்கள்
பொங்குவன்னப்பூவாடைபூமாரிதானிறைப்ப
விண்ணிலமரர்மிகுந்துந்துபிமுழக்க
வெண்ணப்படாதவியன்முரசுதானிரைப்பத்

தம்பட்டமேளமொடுதாரைசின்னம்பூரிகைகள்
கும்பிட்டகொம்புகுமுறிவருநாகசுரம்

உருத்திரவீணையுகந்தசங்குதம்புருக்கள்
கருத்துமகிழத்துலங்குங்காவலவன்வீதியிலே

சித்ரதொனித்தவாத்தியங்களணிந்தோன்சேட்டு
வந்தானரசன்மகன்வீதியிலெனவே

ஆவினுருக்கொண்டேயனுதினன்மாதேவன்
கோவிளங்கன்றினுருக்கொண்டுவந்தானென்றிசைக்கோன்

விருத்தம்

நாகம்வளைத்துநாகமஸ்தநாணின்றடாயதிற்பூட்டி
நாகமீதிற்றுயில்வோனைநாகமணிந்தோன்றுமெடுத்து
நாகங்கடந்தபுனலையுண்டோனகையின்முனையாய்த்தான்போருக்கி
நாகம்வெருவித்திரியவென்றோனினப்பசுவதானரே

ஆக விருத்தம் 56.

நடை

அம்புலியேகொம்பாகவளர்த்தனற்பிபினாய்
வெம்புகின்றவாசுகியைமிக்கதிருவாலாக
மைமுகிலேவான்மயிராய்வான்மீனுரோமமதாய்
சைவமறைநாள்தனிப்பெரூரப்பதகாலாய்
திசையெட்டுப்பெருஞ்சிறந்ததிருக்காற்குளம்பாய்
அசையாதழுக்கும்வீராணமடிமாலவராய்
தாமரையோனுருக்கான்சதாசிவமயேசானும்
காமமுறுநால்வர்களுங்கண்முலைகளாக
இருகதிரிரண்டுபிணைசேர்பெருவிழியாய்
வருசதிரினக்கம்மாசிலாவெள்ளையதாய்
தம்புருவுநாரதருஞ்சோதிச்செவியாக
அம்புனிதக்கங்கையமைந்ததிருநாடியதாய்
ஈசரிருக்குமிடக்தேடிவால்வீசிப்
பாசமுடனழைத்தபரமனவீன்கன்றாய்



காதுகால்வெள்ளைநளினமுகத்தழகும்
வாலும்வயிறுடனேவாலைமீதெனப்பாக
பத்தியுடன்லிறம்பரங்காணகாதிகளும்
செத்திவெள்ளைநாடிசிபிணைஞ்சங்குமலமென்ன
துள்ளிக்குதித்துத்துலங்கவிளையாடி
வெள்ளிமலைக்காளையின்மேல்வீத்திருக்குந்தேவதையைச்
சுத்திவந்துநின்றுதொழுதுமனமகிழ்ந்து
பத்திபிளங்கன்றுபயமறியாதேயோடித்
தாவிக்குதியிட்டுமெள்ளத்தான்வந்துதாயருகின்
மேவிக்குதித்துவிளையாடமீசுரரும்
ஆறுமுகக்கன்றதொன்றுமரீன்முகக்கன்[...]லாம்
வீறுபுலிரெண்டுகன்றும்விட்டுமென்ன[...]விட்டு
காலகன்றைறக்கண்டுகருணைமனமகிழ்[...]வே
சீலகன்றைநாவாற்சிறப்பாக்கவே[...]னையும்
நாரிபங்குஉருவாய்நாடிநமன்[...]றவர்கின்றார்
பாரிடந்தார்பாரூர்பசுவெ[...]பொறுத்து
சந்தணச்சோலைதருமநெறி[...]யாய்த்தாங்க
சந்தருடைதந்தைகடுகவாரூர்[...]க்கு
விண்ணிருபுத்திரர்கள்வீத்தி[...]சயாய்முன்னானில்
மண்ணுலகிற்பிள்ளையெனவன்ப[...]ள்ளோர்

விருத்தப[...]னார்

சார்தகரமாறுதலைக்கண்ணீன்றமினியபசு[...]
தீராநதனைக்கடந்துகரியையீன்றதிறைநந்தோ[...]
கோவுமோராறுமாவுகொன்றைநமதியஞ்சூடுமு[...]யாமல்
கந்தசோதி, யாராறுமறியாமலானூர்வந்தார் அ[...]
யபிவாராரே

ஆக[...]

நடை

அஞ்சகாத்தானுடனேயாறுதலைக்கந்த[...]
கொஞ்சிகமினைக்குழலியெனப்பின்கூட[...]

ஆருருப்புச்சியாருரும்வீதியெங்கும்
சீருலாநோக்கிச்சிறப்பாகவேநடந்தார்

முன்னேருடக்கன்றுமுகந்துடசுவாசைபொங்கி
பின்னேருடவேதப்பெரியதினைசயோர்காலசம்

கன்றினைநகேசுருதிவருவாரையெல்லாம்
தின்றுவிடுமோட்போற்சினந்துடசுவிரட்ட

இக்குத்திசையுந்தெருக்கடந்தப்பார்த்து
மக்கண்ணாராஞர்முகமகிழ்ந்தேயேமனுடன்

...புகழானிகற்சோழன்வாயில்வந்தார்
...திடுமன்னக்கொடியுமாணிகளையும்

நாகம்வளைத்...புமணியுட்பரிக்கைக்
நாகமீதிற்றுயில்லேசோழகுமாளிகையும்
நாகங்கடந்தபுனலை...ன்றமணிநிலையும்
நாகம்வெருவித்திரிய...ன்பாய்த்தலையசைத்து

...ந்தன்றன்னீதி
...ன்றுதிருப்பகவும்

அம்புலியேகொம்பாகவசகித்மணிவாயில்விட்டு
வெம்புகின்றவாசுகியைமிக்குக்கீர்குடித்து

மைமுகிலேவான்மயிராய்நந்தேதீசானர்
சைவமறைதள்தனிப்பெருந்துவினையாடி

திசையெட்டுப்பேருந்தேறயஈனநெடுவீதிகளும்
அசையாதமுக்கும்வந்தருவும்வீதிகளும்

தாமலரையோனுருக்காமுகிழ்முலையாளாம்பரவை
காமமுறுநால்வநவந்தேயாயிழையைக்கூட்டிவைத்தார்

சிருகதிரிரண்டுமுருகுமனையுந்தெருவும்
வருகதிரினங்கபண்டுசிறந்தகந்தவீதிவிட்டு

தம்புருவுநாரதனாட்டிக்கத்தாவுங்கன்றினுடன்
அம்புனிதக்கங்காவிற்சிகாமருகினின்றார்

ஈசரிருக்குமிடத்திலதன்பெருகுந்தேவதைகள்
பாசமுடன்மைழத்துவிரையவேதெண்டமிட்டார்



ஆதிபசுவேமர்கன்றுயாரூரில்வந்துநிற்க
நீதிநெறியந்தாத்தினீள்கதிரோன்சந்திரனும்

விருத்தம்

பூவிலயன்மால்கதிர்மதியும்புகழ்சேர்ககனத்தேவர்களும்
பூவிலரனைத்தானேக்கிப்பொழிவார்களபமலர்மாரி
ஆவுஞ்சோழன்மனநிலைமையவைநாமறிவோமெனநிறைந்த
தேவுஞ்சிறந்தவாரூரைத்திருமேற்சயிலையெனலாமே

ஆக விருத்தம் 58.

நடை

பரலோகசொர்க்கம்பகிரண்டலோகமுள்ளோர்
வரலோகமூவர்திக்கில்வானத்திற்றேவரெல்லாம்

யெல்லோர்களுமாகயின்பமுடன்றெண்டமிட்டு
நல்லோர்நெறியறியநாயகர்வந்தாரெனவே

நல்லோர்நினைப்புநளினவகைச்சோதினையும்
அல்லாமறியவென்றேயந்தாத்திற்றேவர்நின்றார்

பாரிலரன்வந்திருந்தபாரமிகவேபொறுத்து
வீரியஞ்சேர்சேடன்மிருந்துபிலமாய்த்தாங்க

திங்களணிந்தசிவனார்க்கும்பார்பதிக்கு
மங்கலநாண்பூட்டவென்றுவாஞ்சையாய்முன்னாளில்

ஆயிரத்தெண்டண்டமதன்டபுவனமுள்ளோர்
பாயிரமாந்திக்குப்பரப்பில்விசாலிமுள்ளோர்

யெல்லார்களுங்கயிலைக்கேசுக்கனதியினில்
வல்லோர்வடபூமிவாகாகவேயமுங்கி

தெக்கெழும்பிச்சாயுதென்றுதெக்கெழும்பிச்சாயாமல்
மிக்கவகத்தியரைமேலோன்கனநிகராய்

இருத்தவிருந்தாரதனிலீசர்கனதிரொம்ப
பொருத்துதிசைதிக்கேழும்போதவகத்தியனர்

கோவின்கனமெனவேகோவையமனதில்வைத்து
தாவுகின்றபூமிசமானநிறையயிருந்தார்

அன்னேரங்கன்றினுக்குமாளின்முலைப்பாலூட்டி
தன்னேரின்மூவர்பசுத்தானிருக்குமத்தெருவில்

தென்னவன்மகன்றேருஞ்சிறந்தபலதேர்சூழ
மன்னர்குழாங்களொடுமந்திரிமார்யானைபரி

தங்குபுகழ்ச்சாம்பிராணிதான்புகைக்கவீதியெங்கும்
பொங்குக்கருணையுடன்பொழியமலர்மாரி

பாரிற்புரந்தான்போற்பார்வேந்தன்பாலகனுந்
தேரிலழகாய்ச்சிறந்தமதனனெனப்பாய்

திங்கண்முகமுந்திருக்குழைக்கண்ணிரண்டும்
பொங்குமணிமார்பும்புயக்கிரீடம்முடியும்

ஆறுமுகவேன்முருகாராறுமுகமோர்முகமாய்
வீறுபுகடேரேறிவீதிதனில்வந்ததொப்பாய்

துங்கர்புகழெங்கன்றாந்தான்போல்வீதிவர
திங்களெனவேசிறந்தமுகமாதர்

கோதிக்குழன்முடித்துக்கோலமலர்சொருகி
பாதிப்பிறைநுதலிற்பாங்காய்த்திலதமிட்டுக்

காமமடமாதர்கடைவிழிக்கிமைமெழுதி
காமன்சிலைநுதலார்கையிற்கடகமிட்டு

கொங்கைவிம்மியேததும்பக்கொங்கைநிறைகச்சணிந்து
தங்கப்பணியுந்தாளரத்தினம்பூட்டிச்

சின்னயிடைகூறைசிறப்பாகக்கொய்துடுத்தி
அன்னநடையாரனங்கன்படையெனவே

கண்ணடைவிழிமங்கையர்கள்கெந்தம்புழுகணிந்து
தண்டைபுலம்பத்தாணியாள்மன்னன்முன்னே

பத்திரமாய்ச்சங்கீதம்பாடிவருவார்கோடி.
சித்திரஞ்சேர்கோடிசிறந்தமின்னாராடிவர

வித்தைதெறிவீதிவிடங்கனழகுதன்னை
பந்துமுலைமடவார்பார்த்துமயலாகி

கலைநெகிழவேல்விழியார்கண்டுமயங்கிடுவார்
சிலைநுதலார்மோகஞ்சிறந்தேதயவாகுணறிப்



பவளவிதன்மடவார்பார்வேந்தனைநோக்கி
துவளவிளையத்துடங்கிமயக்கமுற்றார்

சின்னயிடையார்சிறந்தமயல்பெரிதாய்
கன்னனுலைமுகத்திற்காட்டிமெழுகானார்

கட்டுமுலைமடவார்கண்டுமயல்பெருகி
மட்டில்கருவின்மயங்குமின்றமின்னார்கள்

ஆசைபெருத்தேயனுபோகமங்கையர்கள்
நேசமதனேநெடுமால்மருமகனே

வாசமுடனென்னைமருவாயோவென்பாரும்
பாசமுடனென்னைமுகம்பாராயோவென்பாரும்

வட்டமுலைக்கோடுமதயீறியேபொருதத்
திட்டமுடன்விம்மித்திரண்டுகச்சையுந்தானோந்து

தந்திமதக்கோடதுபோற்றன்கதித்தப்போககனை
வந்துபெருமையலாற்றுமங்கையர்கள்

பாரமுலைமேலேபார்வேந்தன்பாலகனை
ஆரவேகட்டியணைகுவோமென்பாரும்

மாந்தளிரின்மேனிதனில்வாகுமதவேந்தனையுங்
காந்தட்பூச்செங்கையினாற்கட்டேமோவென்பாரும்

அன்னநடையினரிவையர்கடன்மனதைத்
தென்னனழகுகுறிஞ்சிச்சித்திரம்போன்மெய்மறந்தார்

அமர்தயிதன்மடவாராசைமயலாகி
நிமிர்தக்கடலிற்றிரியுந்துரும்பானார்

அப்படியேபெண்களறிவழிந்துவேந்தன்மகனை
செப்பமுடன்றேர்வாரவீதிதனிற்சிறப்பாய்

சாந்துபுழுகுசவாதுசந்தனங்கலந்து
வேந்தன்மகன்றேரில்விரைந்தேயெறிவாரும்

மாந்தளிரின்மேனியினார்மாலைமலர்செண்டெடுத்து
வேந்தன்மணிமார்பில்விரைந்தேயெறிவாரும்

சென்னிமாதேவிபெற்றசெல்வனைத்தந்தேரேறி
சின்னமதிபோலுஞ்சேர்ந்திருக்கும்வீதிவந்தான்

விருத்தம்

அங்கமுழுயிர் காணுதேயடித்தடித்திருந்தகண்கள்
தங்களினிவைகாணார்தனதுடல்பாதிகாணுஞ்
சங்கரன்றனைக்கண்டார்சஹுவமுங்கண்டார்கண்ணுற்
றிங்களின்மவுலியானைத்தேடுமால்போலவந்தான்

ஆக விருத்தம் 59.

நடை

சின்னவென்றன்மைந்தன்சிறந்தசந்தன்றான்போலே
வன்னமணித்தேரினிலேவாறனென்றேயீசன்
யேமன்றனைநோக்கியேமாஅழகுமன்னன்
றமனெனவாறான்றனைநெருக்கிப்பாருமென்றார்
அவ்வுரையிற்காணஅரசன்றனைநோக்கி
யிவ்வுலகிற்கந்தரிணைபாமெனமகிழ்ந்தான்
மகிழுடனேயாறுசென்னிவைத்தசடையீசுரனார்
அதியமெனருக்கரனுமன்றேளேதுரைப்பார்
குப்பத்தளந்தப்பிக்குதித்தோடித்தேர்க்காலிற்
செப்பமுடன்செத்துவிடுசெத்ததின்பின்மன்னநெறி
தப்பாநெறியுந்தருமவயிராக்கியமும்
இப்போதறிவோநாமேமாவாவென்றமரன்
தேரைமிகநோக்கிச்சிரித்தேதலையசைத்து
பாருமெய்க்கவிதிவந்தபடிசமறிவோமெனவே
கத்தாவுங்கன்றுங்கருதியெதிர்நடக்க
வித்தாரக்கன்றுதுள்ளிவீதிதனிற்பசுவை
சுத்திவருமுன்னேறுங்கொழுதம்மாவென்றலறும்
சித்தநிறைதாயெதிரேசீக்கிரமாயோடிவருங்
கன்றதனைத்தேடிக்கத்தாவெருண்டேடும்
மன்றலைக்கன்றுபசுமாயமெனத்திரிந்து
அடர்ந்தசபையிலானேமன்மாயையதாய்த்
துடர்ந்தபரியானைதந்துங்கர்களசேனை



தங்குங்கடலெழுந்தசாயனுடனேயிரண்டு
பொங்கிநிறைந்தெனப்போதரெம்பவேவந்தருளும்
அந்தச்சபையிலரானேமன்குத்திரமாய்
சிந்தையுடனுள்ளனுகித்தென்னன்மணித்தேரில
யேமாறுலைழுபவிதுசமயமென்றேநி
தாமரமெவைக்குளுயிர்தாமருளிச்சிக்குவர்போல்
மெத்தக்கனசபையின்மீறும்பசுவெருண்டு
கொத்தமன்னர்வேந்தர்குழாங்கணருணெளிய
கோலநிவளர்கொம்பசைத்துக்கோடேறியுட்புகுந்து
ஆலமெனவேயடாவிரட்டியதே
கத்தாபிகவிளக்கன்றதுவுந்தான்விரண்டு
வித்தாரமாகவினையாடியேகுதித்து
துள்ளியிளங்கன்றுதுடர்ந்தபயமனதிற்
றள்ளியேதாவுகன்றுதாயைவெளியேதேடி
நடந்துவருந்தேரினுமமறவியனபாய்
அடர்ந்துதுழையவரசன்மணித்தேர்பயந்து
பின்னுக்கொதுங்குவதைதபின்னுசடையோன்பார்த்து
விண்ணமில்லைக்கொன்றிடென்னவேந்நிதந்திரும்பி
இரண்டவிளங்கன்றினுடல்சேறுயக்குருதிபொங்க
உருண்டுவண்டில்கூறுக்கியோடியதேயன்னேரம்
சிக்கியேகன்றுசிவனேயபயமென்று
தக்கமுடன்றேர்க்காலிற்றான்பட்டிருகூறாய்
த்தாயைஅம்மாவென்றுதயங்கிமிகக்கதறி
தாயைவிட்டகன்றுதவங்கிமயக்கமுற்று
குருதிபுனலபாயக்கோவதையுங்கன்றதுவும்
பருதியொளியாகப்பட்டதுவேதேர்க்காலில்
மாயைபண்ணிப்பட்டமறலிபின்னுமாயையதாய்
மாயையின்றவந்தரம்போய்வானமரரோடிருந்தான

விருத்தம்

உடலுருவழிந்திட்டா லுமுயிருருவழியாதென்றங்
கடலினுமுனிவர்தாதைகருதுமாரணநூல்சொல்லும்
சுடரொளிதிரிவிட்டேகிச்சுடரொளியெவைபோலாகு
மடன்மலர்வாசம்போசலாம்வானமீதெமனுஞ்சென்றான்

ஆக விருத்தம் 60.

நடை

பட்டகன்றைப்பார்த்துப்பதறியனைவோரும்
திட்டெனவேமன்னவர்கள்சோர்ந்திகைத்துநின்றார்
யேமன்மடியவிமையோரிருடிகளுஞ்
சாமவேதத்தலைவர்தமித்தியதும்புருவும்
அந்தரமும்வின்னுமமைக்குதிசைநடுங்க
சந்திரருஞ்சூரியருந்தானவருந்தான்பயந்தார்
வேலோனுமாலோனும்வேதாவுந்தான்கலங்கி
சாலோகசாமீபசாரூபமேவெருவப்
பூலோகமேலோகம்பூமிதிசைமருக
நாலானுமாலானுங்கோக்குமுமையாளிரங்கி
நாகமொடுநாகமெட்டுநாகமெலைவாயும்மயங்கி
மேகமொடுவேககனல்[illegible]றுடலர்தான்கலங்கி
அண்டபகிரண்டமகண்டபிரமாண்டமுள்ளோர்
யெண்டிசையுமேமனிறந்ததுவேயென்றுநொந்தார்

விருத்தம்

பாரிலுயிர்களவைபலவும்பலனுண்மடிவெமனாலே
சீரிலெமன்வதைபடுத்தத்திருமாலயனுமறியார்கள்
மாரின்முதனுளானுவதையமடிந்தானனுபோன்மனுராசன்
றேரின்மறலிபுடல்புகுந்தான்சிவசூரிஜயாநெறிபாலன்

ஆக விருத்தம் 61.

நடை

அங்கவர்கன்மெய்கலங்கவானபுகழ்மறலி
திங்களணிந்தசிவன்வார்த்தைதப்பாமற்



சனுகைபன்னிச்சண்டன்சனுகையுள்ளோன்முன்னேகி
வனுமையினுன்மாண்டான்வனுமையுள்ளோன்றேர்காலிற்
துங்கணமன்கன்றுணிந்துவிட்டவாறுகண்டு
மங்குலில்லாப்பைங்கூழ்போல்வாடிநிலத்தேவிழுந்து
வாலப்புதல்வன்மயங்கியரிவழிந்து
கோலத்திருமேனிகுருதிபடக்கன்றதனை
ஆவிமிகக்கட்டியழுதானரசன்மகன்
பாவினுன்றேரேறிற்பாவம்பழிவருமோ
சங்கரனேசூரியனேசதுர்முகனேமான்மருகா
மங்கையேயாரணியேமாதுதிருமாதே
மங்காதபாவம்வருமோவடியேற்கு
இங்கேபழித்தானெனக்குவருமோவெனவே
அழுதான்றுயர்பெருகியானபுகழ்மன்னனுமே
புழுகுமேலெல்லாம்புழுதிபுரண்டதுவே
தங்கக்கிரீடமதுதானேபுரண்டோட
பொங்குபுகழானணிந்தபூஷணமுந்தான்சிதற
துயரான்மனதுநொந்துதங்கள்மகனேங்கி
அயரான்மயங்கியலறியபயமிட்டான்
அரவணிந்தசர்த்தாவலறியபயமிட்டு
விரையவதின்கன்றையிகழுகந்ததான்சுழன்று
நாலுமுலைதன்னினலமானபால்வடிய
காலினுங்கன்றதனைக்காராப்பார்த்தேகலங்கி
அம்மாடியென்றேயலறியேசால்பதறி
செம்மான்றரித்தசிவனேயெனவலறும்
கண்ணீர்சொரியக்கதறியேகத்தாவும்
யெண்ணமிகப்பெருகியேங்கிமிகமருகி
கன்றைமுகம்பார்த்தக்கதறியேதானழுக
நின்றவர்களெல்லாநெடுமூச்சுவிட்டேறிய
ஆவென்றனைவோருமன்றலறிச்சத்தமிட
கோவென்றுதானழுதுகொற்றவருமெத்தநொந்து

இவ்வருத்தங்கண்டோரியல்பாலன்மெத்தநொந்து
செவ்வருத்தமிப்பாவந்தீர்ப்பாரெவரெனவே
நம்முடலைநம்பியின்றுநன்மையெனநம்முயிர்க்கு
நம்முடலென்றேமகிழ்ந்தானம்முயிர்மெய்யோசதமோ

விருத்தம்

இருக்கநடக்குமாண்டுதனிலேகுமாண்டுமீளாது
இருக்கல்பெருக்கமுடன்முதிதாய்ச்சிறந்தவுடலஞ்சிறகாது
பெருக்குமுடலிற்சீவன்விட்டுப்பிரிந்தாலுடலினுழையாது
நருக்கிப்பணியுஞ்சன்மமவர்க்குந்தணியாதிதுநாக்கவிழ்ப்பே

ஆக விருத்தம் ௬௨.

நடை

சடத்தைநாநம்பிற்சளப்படுவோம்பின்னாளில்
உடற்றான்விரும்பின்றானுற்றபழிநீங்காது
இவ்வாவின்கன்றிறந்தபழிசுமத்தி
ஒவ்வாதுபாவமொழுக்குமோநம்முயிரைக்
சுமலைப்பசுவீன்றகன்றின்பழிதனக்காய்
இமிதமாயென்னுடையசிங்காரவாளதனால்
பூட்டியரத்தமிசைப்போடுவேனென்றுசொல்லி
நீட்டியவாடன்னைச்சிறந்தகன்றின்மேனியுத்தி
நேராகவுன்னிநினைவுகொண்டுபோய்வதன்முன்
சீராகவெல்லாந்திடுக்கிட்டுக்கண்டலறி
மந்திரிமார்வேந்தர்மயங்கியனைவோருஞ்
சிந்தைகலங்கித்திடுக்கிட்டவரேங்கி
வந்துருகிக்கையதனால்மன்னவர்கடாம்பிடித்துக்
கெந்தம்வளர்புயனைக்கிருபையுடனணைத்து
தேத்துவார்மந்திரிமார்சிந்தைத்துயரதனை
ஆத்தினார்வேந்தரசன்மனேக்கம்
காராவின்கன்றதுவுங்காணாமன்மாண்டுவிட்டாற்
சீராகத்தானஞ்சிறப்பாகச்செய்திடுவோம்



ஆலயங்கள்செய்தேயகாமிகமுடித்து
சாலைவளர்த்துத்தருமசத்திரமுடித்து
ஆறாயிரமாவுமன்பாகவேதானம்
வீறாகவீந்தால்வினைப்பழியுந்தான்விலகும்
வேள்விவளர்த்துவிரைவின்மந்திரஞ்செபித்து
தாழ்வில்வரும்பாவந்தவிழ்ப்போமெனவுரைத்தார்
அந்தவுரைசொன்னவவர்கடனைப்பார்த்து
இந்தவுரைசொன்னீரியல்பானமன்னவரே
ஆவினிளங்கன்றினரியபழிவந்துதென்றாற்
கோவில்வருமீசர்மணங்கொள்ளாரொருபோதும்
பசுவையடித்ததன்பாற்பாங்காகத்தோலுரித்து
வசுவாய்ச்செருப்புமறையவர்க்குத்தைத்தீந்தால்
கோவின்பழிதான்கொடியவிதியடியாற்
பூவிலிதுதீர்ந்துபுகழுஞ்சிறப்பாமோ
ஆடுதானேச்சுநின்றாலாடுகடாதபடி
காடுதனிற்றொழுவைக்காவியுடன்கட்டதனால்
ஆட்டுக்குவந்தநோயத்தொழுவினீங்குமதோ
நாட்டுக்குண்ணும்பாவநாடியேசெய்திருக்க
வெள்ளியினாற்பாலவினையுமகலாது
வாழ்விலுயிர்வைத்திருந்தால்வருசினையுநீங்காது
இச்செனனந்தன்னிலியல்புபழிவந்ததென்றால்
பிற்செனனந்தன்னிலுமேபின்றுடருங்கண்டீரே
இடர்ந்துபழிநிறைந்தாலும்பர்தனிலிடைந்து
படர்ந்தபழியாலேபாணரகமெய்திடுவார்
கன்றைநாங்கொன்றுவிட்டோங்காராவுநம்முயிரை
யின்றுகொல்லமாட்டாதியல்பாய்ப்பழிசுமக்கும்
நன்றாய்நாமாண்டாரசமொன்றும்வாறாது
யென்றமழியாத்தீர்த்தியேற்றமகிழ்ச்சியுடன்
சொக்கமதினன்றாய்ச்சுகமாகவீற்றிருந்து
இக்கிலாசனெனச்செனனமெடுத்திடலாம்

இவ்வார்த்தைபாலனெடுத்துரைக்கவேகேட்டு
அவ்வார்த்தைதன்னிலனைவோர்களுங்கலங்கி
வாளாலுயிரையின்றுமாய்த்திரோயானாலும்
மீளுமோசெத்தகன்றுமீளாதுகாவலனே
அஞ்சவேயிப்பழிதானேயப்பாவறியாமற்
கஞ்சமலரோன்விதியாற்காரணமேவந்ததென்றாற்
சாத்திரத்தினால்விதியாற்றுர்ணயிலிப்பாவம்
தீத்தாற்சிவன்காப்பான்சிந்தையுடன்றீராமல்
வல்லடியான்மாளுவதுமனவனேபாவமென்று
பெல்லடியிலேவிழுந்துவேண்டினுரெல்லோரும்
இவ்வகையினெஞ்சமெல்லாமேங்கியெண்ணிப்பாலகனும்
கவ்வையுற்றேயிட்டழுந்துகாவலனுநிற்கையிலே
மாயப்பசுமருகிமன்னனையேசுத்திவந்து
காயநடுங்கிக்கதறியபயமிட்டு
கன்றதனைக்குக்கருதிமுலைவாயில்வைக்கும்
குன்றனையதோளான்குமரன்றனைப்பார்க்கும்
ஆவுவருந்தப்பாலன்றிவழிந்துமெய்சோர்ந்து
பூவில்விழுந்துபொறிகலங்கிமெய்மறந்து
மயக்கமுற்றமன்னவனைமந்திரியார்தாமெடுத்துத்
தியக்கமுற்றூழ்வினைதான்றீருமோமன்னவரே
தாவமுறுவல்வினையுந்தங்காமற்பாவமற
தேவர்புகழ்வேள்விசிறப்பாகச்செய்யுமின்னாள்
கன்றிறுடனுமுயிர்காசினியின்மாண்டுவிட்டால்
மன்றினிலேயதன்றிமன்னனுயிரோமடிவார்
வேந்தனிந்தச்செய்திவினையவறியாமற்
சேர்ந்தபலவேள்விதவஞ்செய்வோமெனவவர்கள்
நூலவன்றுமையாய்நாணக்குமமைச்சாலையிலே
பாலன்றனைத்தேற்றிப்பார்வேந்தர்கொண்டுசென்றார்
வேந்தன்மகன்போகவிரைந்ததுகத்தாக்கன்றதனை
சாந்தகமாய்ச்சுத்தித்தழன்றதுபோலென்னமுற்று



பாலன்றனைவேந்தர்பாங்காகவேதேற்றி
சீலமுள்ளவேந்தன்சிறப்பாயறியாமல்
வேள்விசெய்யக்கொண்டுசென்றார்வேந்தனுக்கேயிச்சேதி
கேள்வியுறநாமுரைத்துக்கீர்த்திமன்னனீதிநெறி
இன்றறிவோமென்றேயிறையவனுந்தான்மகிழ்ந்து
யென்றுமசையாதிருந்தமணியசைக்க
அவ்விதிவிட்டேயாசன்குடிதேடி
செவ்வாகஆவுஞ்சிறப்பாய்நடந்ததுவே
நீதிமனுவேந்தர்நிறைந்தமணிவாசல்
சேதியன்னீதிசிறந்தவசியவர்க்கள்
யேழையெவர்க்குமிடர்வினைத்தாராகில்
வேனையிலராசாவைமேவவரிதாகையினால்
மணியையசைப்பார்மணியோசைகேட்டரசன்
துணிவுமணியாற்றலங்கியருகணைந்து
நாயம்விளங்கிடநீதிதப்பாமல்
ஆயமனுநூலாலவர்கள்குற்றமாராய்ந்து
உள்ளபடிகுற்றமுறவெதிராளியென்னார்
வெள்ளளவுகுற்றமிருக்கவெவர்தட்டினும்
மன்னரெனினுமகாபெரியோராகிடினும்
அன்னவரிற்குற்றமறிந்துகழுவேற்றிவிப்பார்
முந்துமணியிலுவுமுழவேழுவேந்தர்பட்டம்
வந்துமசைவதில்லைமன்னவன்றன்னாக்கினையால்
திங்களொளிக்கொம்பதனுஞ்சிறந்தமணிநாவைப்
பொங்குமுடனசைப்புண்ணியனுந்தானசைத்தான்

விருத்தம்

பூவிற்கருணைநெடுமாலும்போதவிறிபாஞ்சதுர்முகனு
மேவிப்பறந்தும்பாதாளமீறிப்பிளந்துங்காணரிதா
மாவிப்படியிலடிமுடியுமாசன்வாயிற்கீன்மேலு
[illegible]ாவிற்றுதித்தேவுசெய்யுநலமாக்கண்டதிதுவாமே

ஆக விருத்தப் 63.

நடை

அறிஞர்களுந்தேடி யறியா தபாதமதை
அறம்படைத்தமன்னனவன் வாயிற்கேட்படிதான்

கண்டுதொழுமேழ்படியுங்காதலையன் காணுத
வண்டுமலர்முடியையவாழ்த்தித்தொழுதிடுமாம்

அந்தநிமிடமசையாதிருந்தமணி
அந்திமதிசூடுமரனார்வந்தாரெனவே

சோமன்றடிக்கமணிச்சோதிதனைத்தொழுது
காமன்றனையெரித்தகர்த்தனார்வந்தாரெனவே

அதிரவேயோசையினையோர்களுங்கேட்க
மதுரமணியிடிபோல்வாகாய்முழங்கியதே

இம்மணியினோசையியல்பாயாசனுக்கு
செம்மணியினோசைதென்செவியிற்பாய்ந்ததுபோது

கேட்டபொழுதேதகிலேசமுற்றுமெய்மறந்து
வாட்டமுற்றுச்சோழன்மதிமயங்கியேசுழன்று

முன்னாளசையாமுனரிமணிநாவோசை
பின்னாளிற்கேட்கவெனவாவிதிப்படியோ

என்றுதான்சோழமன்னனெண்ணியெண்ணியேபதறி
இன்றுமணியசைந்ததென்னமோநாமறியோம்

அரசரவதியதோஆழியெல்லாந்தப்பறுமல்
விரையவேவந்துகுடிக்கிளைக்காஞ்சூழ்ந்ததுவோ

வேதியர்கள்சாலமிகவேபழித்ததுவோ
